பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை (14.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 318

## யாழ். குடாக்கடலில் நேற்று மோதல்!

யாழ்ப்பாணம்,ஒக்.14

யாழ்.குடாக்கடலில் குருநகர் - பாஷையூர் கடற்பரப்பில் நேற்று முற்பகல் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் சுமார் ஒரு மணி நேரம் மோதல்கள் இடம்பெற்றன.

கல்லடி மற்றும் முகத்துவாரக்கட்டை ஆகிய பகுதிகளுக்கு இடையில் நேற்று முற்பகல் 9.45 மணி தொடக்கம் 10.50 மணிவரை பெரும் கடற்சண்டை நடைபெற்றது.

கடற்சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது பலாலியில் இருந்து கடற்பரப்பை நோக்கி ஷெல்வீச்சு நடத்தப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படைப் படகு அழிப்பு; 3 சடலங்கள் கைப்பற்றல்

நேற்றைய கடற்சமரில் கடற்படையினரின் படகு ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது. மூன்று கடற்படையினரின் சடலங்களைக் கைப்பற்றியுள்ளோம். ஆயுதங்களையும் மீட்டுள்ளோம் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். மொத்தம் ஐந்து கடற்படையினர் உயிரிழந்தனர் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் படகு மூழ்கடிப்பு படைத் தரப்பில் அறிவிப்பு

நேற்றைய மோதலில் கடற்புலிகளின் படகு ஒன்றைக் கடற்படையினர் தாக்கி மூழ்கடித்தனர். மூன்று கடற்படையினர் காணாமற்போயினர்.

இவ்வாறு இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

கடற்புலிகள் ஐந்து படகுகளில் வந்து தாக்கினர். அவற்றில் ஒன்றையே கடற்படையினர் மூழ்கடித்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.



## மனித உரிமை மீறல் கண்காணிப்பகம் தேவை
## அரசு அனுமதிக்காது; பேச்சுக்கே இடமில்லை



### ஆர்பரும் சமரசிங்கவும் எதிரும் புதிருமான கருத்து!

கொழும்பு,ஒக்ரோபர்14

தற்போதைய நிலையில் இலங்கையில் மனித் உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு ஐ.நா.சபையின் மனித உரிமைக் கண்காணிப்பகம் போன்ற ஓர் அமைப்பின் பிரசன்னம் அவசியமாக இருக்கிறது.

ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் இவ்வாறு தெரிவித்தார். ஆனால், அத்தகைய ஒரு மனித உரிமை கண்காணிப்பகத்தை இலங்கையில் அமைப்பதற்கு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியிருக்கிறார் மனித உரிமை அமைச்சர் மஹிந்த சமரசிங்க. ஆர்பர் அம்மையாருக்கு முன்பாக வைத்தே - பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் சமரசிங்க இதனை அறிவித்தார். அங்கே இருவரும் எதிரும் புதிருமாகக் கருத்துக்களை வெளியிட்டனர்.

தமது இலங்கை விஜயத்தின் முடிவில் நேற்றுக் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்து தமது விஜயம் பற்றி விளக்கினார் ஆர்பர் அம்மையார். அப்போது, அவரோடு அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் உடனிருந்தார். அதன்போதே இருவரும் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துகளை வெளிப்படுத்தினர்.

**கண்காணிப்பகம் குறித்து பேசவும் தயாரில்லை**

சர்வதேச சமூகத்தில் நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றோம். ஆனால் எமக்கென்று சட்டதிட்டங்களும் ஒழுங்குமுறைகளும் இருக்கின்றன. எனவே ஐ.நா.மனித உரிமை கண்காணிப்பகத்தை இங்கு ஆரம்பிப்பது குறித்து பேசுவதற்குக் கூட நாங்கள் தயாராக இல்லை என்று ஆர்பர் அம்மையாருக்கு முன்பாகவே கூறினார் அமைச்சர் சமரசிங்க.

நேற்றைய செய்தியாளர்கள் சந்திப்பில் ஆர்பர் அம்மையார் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

இலங்கையில் இடம்பெற்று வரும் ஆயுத மோதல்கள் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான அவசர நடவடிக்கைகள் என்ற பின்னணியில் பார்க்கின்றபோது சட்டத்தை ஆட்சிப்படுத்துவதில் இருக்கின்ற பலவீனமும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் தப்பித்துப்போகும் நடைமுறைகளும் மிகவும் அதிர்ச்சி தருபவையாகவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வெலிக்கடைத் தமிழ் கைதிகளை ஆர்பர் அம்மையார் சந்தித்தார்
#### உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கொழும்பு,ஒக்.14

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வந்த தமிழ் அரசியல் கைதிகளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் நேற்றுப் பிற்பகல் சந்தித்துப் பேசினார்.

கைதிகளுக்கு லூயிஸ் அம்மையார் சில உறுதிமொழிகள் வழங்கியதையடுத்து அவர்கள் நேற்றுமாலை தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த 82 கைதிகள் சார்பாக அவர்களின் பிரதிநிதிகள் ஐவரை சிறைச்சாலையின் பொது மண்டபத்தில் வைத்து ஆர்பர் அம்மையார் சந்தித்தார். கைதிகள் தமது பிரச்சினைகளை அம்மையாருக்கு விளக்கிக் கூறினர். விசாரணைகள் எவையும் இன்றி நீண்ட காலமாக தாங்கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறிய கைதிகள், தங்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சியில் இன்று 33 1/2 மணி நேர தொடர் ஊரடங்கு

யாழ்ப்பாணம்,ஒக். 14

வடமராட்சிப் பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. நேற்றிரவு இந்த அறிவித்தல் பலாலி வானொலிச் சேவையில் ஒலிபரப்பப்பட்டது.

அந்த அறிவிப்பின் பிரகாரம் நேற்று (சனிக்கிழமை) இரவு 7 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று முழுநாளும் அமுலில் இருந்து நாளை திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கே தளர்த்தப்படும். அதாவது தொடர்ச்சியாக 33 மணி 30 நிமிடம் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்படும்.

வடமராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வழமை போன்று இரவு 7 மணி தொடக்கம் அடுத்தநாள் அதிகாலை 4.30 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. (அ-5)

### அரசின் அமைதி முயற்சிகள்: இந்தியப் பிரதமர் மகிழ்ச்சி
#### சந்திப்பின் பின் மஹிந்த தகவல்

புதுடில்லி,ஒக். 14

இலங்கையின் அமைதி முயற்சிகள் தொடர்பான எமது அரசின் நிலைப்பாடுகள் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மகிழ்ச்சி தெரிவிக்கின்றார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

புதுடில்லியில் நடைபெறும் 'ஹிந்துஸ் தான் ரைம்ஸ்' மாநாட்டில் பங்கேற்க நேற்று முன்தினம் இந்தியா சென்ற ஜனாதிபதி, நேற்று மாலை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புக்களின் போது என்ன விடயங்கள் பற்றிப் பேசினீர்கள் என்று ஜனாதிபதி மஹிந்தவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது அமைதி முயற்சிகள் தொடர்பான அரசின் நிலைப்பாடுகள், நட வடிக்கைகள் குறித்து நான் பிரதமர் மன்மோகனுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போஸ் காகிதாதிகளின் மாபெரும் மொத்த மலிவு விற்பனை

80 P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 13/=
120 P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 19.50/=
160 P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 26/=
200 P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 32.50/=

**பொலித்தீன் கவரிடப்பட்ட கொப்பிகள்**

320P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 75/=
400P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 85/=

மற்றும் பாடசாலை உபகரணங்கள் மலிவு விலையில் OCT. 15-18 வரை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இல.3, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி.53980)


## 8ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவஞ்சலி

தோற்றம்
07 ★ 12 ★ 1949



மறைவு
12 ★ 10 ★ 1999

**திருமதி சாந்தநாயகி பீதாம்பரம்**

திதி: திருதியை

ஆண்டுகள் எட்டு சென்றிடினும்
ஆறாது எம் துயர்.

'சாந்தசோலை',
04, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (66923)

- குடும்பத்தினர்.

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978.02.04, 7 இல் செவ்வாய், மூலம் நட்சத்திரம், லக்கின பாவம் 64, 3 சுற்றுப் பாவம் 98 உடைய மெல்லிய, சிவந்த பெண்ணுக்கு வெளிநாட்டு மணமகன் தேவை.
தொடர்பு:- G.S.V.நடா
021-222-3885, 0776793427


# ஐரோப்பிய நாடுகளில்

சகல துறைகளிலும் உயர்கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு

**UK, Russia , Belarus, Poland, Ukraine, Krygyztan** போன்ற நாடுகளில் உயர்கல்வியை கற்பதற்கு அனுமதி மற்றும் விசா பெற்றுத்தரப்படும்

**Canada, Singapore, Malaysia, and India** ஆகியநாடுகளில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும் அனுமதி.

Singapore, Malaysia ஆகிய நாடுகளில் பாலர் வகுப்பு முதல் பாடசாலைகளில் அனுமதி பெற்றுத்தரப்படும்.

பெற்றோருக்கும் (visa) பெற்றுத்தரப்படும்.

Belarus, Ukraine ஆகிய நாடுகளில் உயர் கல்வியை தொடரவிரும்பும் மாணவர்கள் 25/10/2007 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

*Visa Application* நிரப்ப *Personal Statement* மற்றும் *Documentation* செய்வதற்கும் UK *Visa* மறுக்கப்பட்டவர்களுக்கு *Appeal* மூலமாகவோ அல்லது *Re- Application* மூலமாகவோ *Visa* பெறுவதற்கு மற்றும் *Visa* தொடர்பான சகல சந்தேகங்களுக்கும் ஆலோசனை வழங்கப்படும்

**PARANAN ASSOCIATE PRIVATE LIMITED**
No- 403 1/1, Galle Road, Colombo-06
Tel: 2551241,2551641 Mobile: 0777 370292 Fax: 2507932
Email: parananassociatepvtltd@yahoo.com



# அமெரிக்க விசா லொத்தர் விண்ணப்பம்
# Green Card Application

1) Full Name:
2) Father's Name:
3) Date of birth: 4) Male ☐ Female ☐
5) Address:
6) Qualitication O/L ☐ Degree ☐ A/L ☐ Others ☐
7) O/L சித்தியடைந்திருக்க வேண்டும்

| *Full Name:* | *Sex* | *Date of birth* | *Place of birth* |
|---|---|---|---|
| *Wife* | | | |
| *Child - 1* | | | |
| *Child - 2* | | | |
| *Child - 3* | | | |

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்**

01. மேலேயுள்ள விண்ணப்பத்தைத் தாளொன்றில் நிரப்பவும்
02. விண்ணப்பதாரி, மனைவி, 21 வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளின் சமீபத்திய போட்டோக்களை (அளவு 2''X2'' அங்குலம்) அனுப்பவும். பின்புறம் பெயர்களை எழுதவும்.
03. பூரணப்படுத்திய படிவம், போட்டோக்களுடன் சேவைக் கட்டணமாக 500/= மணியோடரை *Manager, Penguin Book Shop, B 2 / F 23 Bloemendhál Flats, Colombo -13* இற்கு அனுப்பவும். மணியோடர் பெறும் தபாற்கந்தோர் - *Kotahena.*
04. கடந்த பல வருடங்களாக *Green Card* சேவையில் முன்னணியிலுள்ள நாம், உங்கள் விண்ணப்பத்தை அமெரிக்காவுக்கு அனுப்பி, ரசீதை உங்களுக்கு அனுப்பி வைப்போம்.
05. ஒருவர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பலாம். ஆனால் மனைவி தனியாக இன்னொன்றையும் அனுப்பலாம். அதில் கணவன்/ பிள்ளைகளின் விவரங்கள் பதியப்பட வேண்டும். மேலதிக விண்ணப்பத்திற்கு சேவைக் கட்டணம் 400/= போட்டோக்கள் மேலதிகமாகத் தேவையில்லை.
06. 21 வயதிற்கு மேற்படின் தனியாக விண்ணப்பிக்கவும்
07. சகோதரர்கள், தாய், தகப்பன் தனிக் குடும்பமாக விண்ணப்பிக்கவும்.
08. 18 வயதுக்கு மேற்படின் தனியாக விண்ணப்பிக்கலாம். ஆனால், *O/L* சித்தி முக்கியம்.

**Penguin Book Shop**
B 2 / F 23 Bloemendhal Flats, Colombo - 13.
T.P. : 2438367, 0775438898 (சி.63990)


## வீடு விற்பனைக்கு

சித்தங்கேணி சிவன் கோயிலுக்கு அருகில் 4 ¾ பரப்பு நல்ல தண்ணீர், நல்ல சுற்றாடலில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
தொ.பே.0777111836
*தி.மகாதேவா,*
*36, கைலாச பிள்ளையார் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்*

## திருத்தி வாசிக்கவும்

நேற்றுமுன்தினம் 12.10.2007ஆம் திகதிய உதயனின் எட்டாம் பக்கத்தில் வெளியான திருமதி உமாதேவி சதானந்தலிங்கம் என்பவரின் மரண அறிவித்தலில் தலைப்பு திருமதி உமாதேவி சுதானந்தலிங்கம் என்று தவறாகப் பிரசுரமாகியுள்ளது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.

## மரண அறிவித்தல்

### *செல்வி கங்காதரன் தாமினி*



(திருக்குடும்ப கன்னியர்மடம், சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை, யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (2004 - A/L - கணிதம்) பழையமாணவி, திருநெல்வேலி உயர் தொழில்நுட்பக் கல்லூரி H.N.D.E. முதலாம் வருட மாணவி, St John's Ambuance, Trinco)

இல.02, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கங்காதரன் தாமினி 11.10.2007 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கங்காதரன் (கங்கா போட்டோ - பெயின்ரர்) - சிறி சக்தி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், சாளினி (IIS - Student), தர்சி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி 2009 A/L Arts) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, பாக்கியம், கதிரவேலுப்பிள்ளை மற்றும் நவமணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பூமணி - அன்ரனிப்பிள்ளை, சிவமணி - ஜேம்ஸ் (அமரர்), மனோன்மணி - மகேந்திரன் (அமரர்), இந்திராணி - இந்திரசேகரா, சாந்தமூர்த்தி - மகேஸ்வரி, பாலபாரதி - மகேஸ்வரி, சந்திரபோஸ் - கமலவேணி ஆகியோரின் அன்பு மருமகளும், கமுகாசலம் - இந்திராதேவி (அமரர்), சிறிதரன் - புனிதவதி, தணிகாசலம் - சித்திரா, சந்திரகுமார் - பவானி, சாந்தாதேவி - குணரெட்ணம், கலாதேவி - ராஜகோபால், சந்திராதேவி - குணசேகரம், சாரதாதேவி (அமரர்) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2007) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2, ஆசீர்வாதம் லேன்,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்
கங்காதரன்
(தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான சர்வதேச அரசியல் அழுத்தம் மிகக் குறைவு; அவற்றின் ஈடுபாடுகளும் மிக மட்டுப்படுத்தப்பட்டவையே!

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வழிகளுக்குரிய கதவுகள் தற்போதும் திறந்தே உள்ளன என அமைதிப் பேச்சுக்களுக்கு நடுநிலைமை வகித்து வந்த நோர்வே தெரிவித்துள்ளது.

எனினும் போர் தொடர்ந்து கொண்டிருக்கையில் நாட்டில் உள்ள சிலர் போருக்கான மாற்றுப்பாதையைத் தேடுகின்றனர்.

2002ஆம் ஆண்டு உருவான போர் நிறுத்த உடன்பாடு கடந்த வருடம் முறிவடைந்ததில் இருந்து 5,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை சூடானின் டேபர் பகுதியில் இதே காலப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது உயர்வானது என சில அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், சிறிலங்கா மீதான அனைத்துலகத்தின் அரசியல் அழுத்தங்கள் குறைவானது என்பதுடன், அனைத்துலகத்தின் ஈடுபாடுகளும் மட்டுப்படுத்தப்பட்டவை.

சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் அமைதி வேண்டும் என கூறுகின்றனர். ஆனால், பேச்சுக்களுக்கு உதவ நோர்வே தயாராக உள்ளதாகத் தெரிவித்தபோதும் இரு தரப்பினரும் அதனை உறுதியாகக் கருத்தில் எடுக்கவில்லை.

இரு தரப்பினரும் எங்களுக்கு என்ன சொல்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு அமைதி வழியிலான தீர்வு வேண்டும் எனக் கூறுகின்றனர் என நோர்வேயின் சமாதானத்திற்கான பிரதிநிதி ஜோன் ஹன்சன் பவர் கடந்த வாரம் ஒஸ்லோவில் உள்ள தமது அலுவலகத்தில் இருந்த எமக்குத் தெரிவித்தார். நாங்கள் பேச்சுக்களுக்கான பாதைகளைத் திறந்து வைத்திருப்பதனை எமக்கு முக்கியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சென்றிருந்த சிறிலங்காவின் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும், போர் நிறுத்த உடன்பாட்டின் நடுநிலையாளருமான எரிக் சொல்ஹெய்ம் நியூயோர்க்கில் கடந்த செப்ரம்பர் மாதம் சந்தித்திருந்தார். எனினும், தற்போது இரு தரப்பும் மறுதரப்பிற்குத் தமது நிலைப்பாட்டை அதிகம் கூறுவதில்லை என இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தை அமைப்பதற்காக இரு தசாப்தங்களாக விடுதலைப் புலிகள் போராடிக்கொண்டு இருக்கின்றர். அவர்கள் தமது சுதந்திர தாயகத்திற்கான கொள்கையை தற்போது புதுப்பித்துள்ளனர். எனவே பெரும்பான்மை சிங்கள சமூகத்தினால் அனைத்துக் கட்சி குழுவினூடாக வரையப்படும் தீர்வுத் திட்டம் தொடர்பாக விவாதிக்க அவர்கள் விரும்பப்போவதில்லை.

**தாமதமாகும் தீர்வு தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது**

தீர்வுத் திட்டமானது தாமதப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் பொருள் என்னவெனில் அது தமிழ் மக்களினதோ அல்லது விடுதலைப் புலிகளினதோ அபிலாசைகளைப் பூர்த்தி செய்யப்போவதில்லை என்பது தான் என தேசிய சமாதான சபையின் தலைவரான ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார். தற்போதைய படைத்துறை மோதல்களை அது மாற்றும் என்பதற்கான எந்த அறிகுறிகளும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பெரும் மோதல்களுக்குத் தம்மைத் தயார்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகளின் பகுதிகளைச் சூழ படையினர் தமது வளங்கள் நிலைகளைப் பலப்படுத்தி வருவதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். இருந்த போதும் விடுதலைப் புலிகளை இந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் இருந்து வெளியேற்ற முடியும் எனவும் சிலர் நம்புகின்றனர்.

1980களில் இந்திய அமைதிப் படையினர் இந்தப் பகுதியில் அதிகளவு இரத்தம் சிந்தியிருந்தனர். அதன் பின்னர் இரு தரப்பினரின் மோதல்களும் முடிவுக்கு வந்தன. அது எதிர்கால தலையீடுகளில் இருந்தும் இந்தியாவைத் தள்ளி வைத்திருந்தது. மேலும் புதிய அமைதி காக்கும் பணிகள் தொடர்பான எண்ணத்தை இந்தியத் தரப்பு கைவிடும் நிலையையும் இந்த மோதல்கள் ஏற்படுத்தியிருந்தன.

விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களில் கைதேர்ந்தவர்கள். அதனால்தான் பல நாடுகள் அவர்களைப் பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்த்துள்ளன. சில தாக்குதல்கள் மூலம் பதில் தாக்குதல்களை அவர்கள் நடத்தியுள்ளதுடன், தென்னிலங்கையின் பொருளாதார மையங்கள் மீதும் அதிகளவிலான தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

**விடுதலைப் புலிகளின் விமானத்தாக்குதல்**

இரு விமானத் தாக்குதல்களையும் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பின் மீது விடுதலைப் புலிகள் நிகழ்த்தியிருந்தனர். முன்னர் எப்போதும் நடைபெற்றிராத இந்த தாக்குதல்களுக்கு அவர்கள் இலகுரக வானூர்திகளைப் பயன்படுத்தியிருந்தனர். அவை உயர்ந்த எதிர்பார்ப்புக்களை எற்படுத்தியிருந்தன.

போரைத் தவிர வேறு மாற்றுவழிகள் இல்லை என தென்னிலங்கை கருதியதனால் பல போர் நிறுத்த உடன்பாடுகள் தோல்வி கண்டிருந்தன. இதன் விளைவாக 70,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனரே தவிர இறுதி வெற்றிக்கான சிறிய நம்பிக்கையும் ஏற்படவில்லை.

## ரோய்ட்டர்ஸ் ஆய்வுக் கட்டுரையில் பீற்றர் ஆப்ஸ்

படை நடவடிக்கைகளுக்கு 84 விகிதமான தென்னிலங்கை மக்கள் ஆதரவு அளிப்பதாகவும், அரசின் வெற்றிகரமான படை நடவடிக்கைகள் தொடரும் என 89 விகிதமானோர் நம்புவதாகவும் தேசிய சமாதான செயலகம் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மோசமடைந்து வரும் மனித உரிமை மீறல்கள்**

இலங்கையில் மோசமடைந்துவரும் மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்து அது அனைத் துலகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்படலாம் என இராஜதந்திரிகள் எச்சரித்து வருகின்றனர். அனைத்துலக தொண்டர் நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் மீது அரச அதிகாரிகள் கடும் சொற் தாக்குதல்களை மேற்கொள்ளும் திருப்பத்தினை இது ஏற்படுத்தியுள்ளது.

நூற்றுக்கணக்கான சிறுபான்மை தமிழ் மக்கள் காணாமற் போயுள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. பெரும்பாலும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தொண்டர் அமைப்பு பிரதிநிதிகளும், ஊடகவியலாளர்களும் அதிகளவில் கொல்லப்பட்டும் வரு கின்றனர். இவற்றில் சில உலகில் மிகவும் அதிக எண்ணிக்கையாகும்.

சிறிலங்கா அரசின் ஆதரவுடன் செயற்படும் கருணா குழு, விடுதலைப் புலிகள் மீது இதற்கான குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. கருணா குழுவிலும் தற்போது பிளவு தோன்றியுள்ளது. மூதூரில் கொல்லப்பட்ட 17 தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் உட்பட பல படுகொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஆணைக் குழு முற்றாகத் தோல்விகண்டு வருவதாக அனைத்துலக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வாக்களிப்பதனை புறக்கணிக்குமாறு தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் கேட்டதனைத் தொடர்ந்து தனிச் சிங்கள மக்களின் வாக்குகளினால் 2006ஆம் ஆண்டு அரச தலைவராக மகிந்த தெரிவு செய்யப்பட்டிருந்தார். தமது சமூகங்களை தமக்குப் பின்னால் அணிதிரளச் செய்வதற்காக இரு தரப்பினரும் போரின் மூலம் நன்மை அடைந்து வருவதாகவும் சில இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்திற்கு கிடைத்த உதவிகள் மற்றும் அனுசரணைகளை அமைதி முயற்சிகளுக்குப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகளை பிரதான நீரோட்டத்துக்கு இட்டுச்செல்வதில் தவறிழைக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தோனேசியாவின் ஆச்சேப் பகுதியில் அது சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது என இராஜதந்திரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

''சிறிலங்கா அரசு இந்த ஒரு சந்தர்ப்பத்தைத் தவறவிடுவதற்காகத் தனக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களைத் தவறவிடவில்லை'' என ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகத்தின கீழ் பணிபுரிந் அதிகாரியான ஜான் எக்லான்ட் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது தெரிவித்துள்ளார். ''அது உங்களுக்கான சந்தர்ப்பம்'' எனவும் நாம் அவர்களிடம் தெரிவித்திருந்தோம் என அவர் மேலும் தெரிவித்தார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. *

## இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!



16.10.1953 அன்று யாழ். பொதுசன நூலக கட்டடத்திற்கான வரைப்படம் தயாரிக்கப்பட்டது.

*தென்கிழக்காசியாவிலேயே சிறந்த நூலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க விரும்பிய லோங் அடிகள் லண்டனுக்குச் சென்று நூலகவியல் நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டார். அதற்கு அவர்கள் நீங்கள் இதற்காகவா இவ்வளவு தூரம் வந்தீர்கள். உங்கள் அண்டைநாடான இந்தியாவிலுள்ள எஸ்.ஆர்.ரங்கநாதனிடம் போய்க் கேளுங்கள் அவரைவிடவா நாங்கள் ஆலோசனை வழங்கப் போகிறோம் எனக் கூறி அனுப்பி வைத்தனர்.*

*நேரே தமிழ்நாட்டுக்கு வந்த லோங் அடிகள், நூலகவியலின் தந்தை என அழைக்கப்படுபவரும் கோலன் பகுப்பாக்கத் திட்டம் என அழைக்கப்படும் நூலக பகுப்பாக்கத் திட்டத்தை உலகிற்கு அறிமுகம் செய்தவருமான டாக்டர் எஸ்.ஆர்.ரங்கநாதனைச் சந்தித்து தனது கோரிக்கையை முன்வைத்தார்.*

### இந்திய நிபுணரின் மதிவண்ணத்தில்உருவான யாழ். நூலகக் கட்டடம்

*லோங் அடிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட எஸ்.ஆர்.ரங்கநாதன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து யாழ்ப்பாணம் முனியப்பர் கோயிலடிப் பிரதேசத்தை நூலகம் அமைப்பதற்குப் பொருத்தமான இடமாகத் தெரிவு செய்தார். பிரபல கட்டடக் கலைநிபுணர் நரசிம்மனுடன் இணைந்து நூலகக் கட்டடத்திற்கான வரை படத்தைத் தயாரித்து 16.10.1953 அன்று வரைபடத்தைக் கையளித்தார்.*

*எஸ்.ஆர்.ரங்கநாதனின் ஆலோசனையில் உருவாகியதே யாழ்.பொதுசன நூலகம். திருகோணமலை நூலகத்தையும் எஸ்.ஆர். ரங்கநாதனும் நரசிம்மனுமே நிர்மாணித்தனர்.*

*இதேவேளை 1842ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் நூல்நிலையம் செயற்படத் தொடங்கிவிட்டதாகத் தகவல் தெரிவிக்கின்றன.*

- தாண்டவன் -

# இவ்வருடம் நோபல் பரிசு பெறுவோரில் அமெ. துணை அதிபர் அல்கோரும் ஒருவர் காலநிலை ஆய்வு மையத்துக்கும் கிடைத்தது

சீதோஷன நிலை மாற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக ஜெனீவாவில் அமைக்கப்பட்ட இந்திய சுற்றுச்சூழல் ஆய்வாளர் ராஜேந்திர கே.பச்செளரி தலைமையிலான அமைப்பு (Intergovernmental Panel on Climate Change) 2007ஆம் ஆண்டின் நோபல் பரிசை வென்றுள்ளது.

இந்த அமைப்பு அமெரிக்காவின் முன்னாள் துணை அதிபர் அல்பேட் ஆர்னால்ட் அல்கோர் (வயது - 59) உடன் இப்பரிசைப் பகிர்ந்துகொள்கிறது என சுவீடன் அக்கடமி தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்கள் மற்றும் உலக வானிலை அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்ட ஐ.பி.சி.சி. கடந்த 1988இல் உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பு, வானிலை மற்றும் கடல் ஆராய்ச்சியாளர்கள், அறிவியல் விஞ்ஞானிகள், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் நிபுணர்கள் அடங்கிய 3 ஆயிரம் பேரைக் கொண்டது.

பூமி வெப்பமயமாவதையும், அதனால் ஏற்படும் தாக்கங்களையும் எடுத்துரைத்து, மக்களிடையே சீரிய முறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது இந்தக் குழு.

சீதோஷன நிலை மாற்றத்தால் உண்டாகும் விளைவுகள் தொடர்பாக, உலக நாடுகளுக்கிடையே மிகச் சிறப்பாக விழிப்புணர்பு ஏற்படச்செய்தமைக்கு முன்னாள் அமெரிக்கத் துணை அதிபர் அல் கோருக்கும் அமைதிக் கான நோபல் வழங்கப்படுவதாக சுவிடன் அக்கடமி தெரிவித்துள்ளது.

உலகம் வெப்பமயமாவதை கருப்பொருளாகக் கொண்டு, கடந்த ஆண்டில் புத்தகம் ஒன்றை வெளியிட்டவர் அல்கோர். மேலும் இதுதொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திய இவரது ஆவணப்படமான 'ஒன் இன்கன் வீனியன்ட் ரூத்' ஆஸ்கர் விருதையும் பெற்றது.

சுவிடன் அறிவியலாளரும் டைமற்றைக் கண்டுபிடித்வருமான அல்பேட் நோபலின் நினைவாக வழங்கப்படும் இப்பரிசுகள், அவரது நினைவு நாளான டிசெம்பர் 10ஆம் திகதி வழங்கப்படுவது வழக்கம்.

**பிரிட்டன் பெண் எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு**

பிரிட்டனைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் மோரிஸ் லெஸ்சிங் (வயது - 87) 2007ஆம் ஆண்டின் இலக்கியத் துக்கான நோபல் பரிசை வென்றுள்ளார்.

நாகரீக சமூகத்தின் பிளவுகளை தனது எழுத்துக்கள் மூலமாக சீரிய முறையில் பதிவு செய்தமைக்காக இந்த உயரிய பரிசு வழங்கப்படுவதாக சுவீடன் அக்கடமி தெரிவித்துள்ளது.

ஆபிரிக்காவில் 1950களில் வசித்தபோது டோரிஸ். அந் நாட்டில் வெள்ளையர் மற்றும் கறுப்பர்களுக்கு இடையே இருந்த பிளவினை 'தி கிராஸ் இஸ் சிங்கிங்' என்ற புத்தகத்தின் வாயிலாகப் பதிவு செய்தார்.

**ஜேர்மனி, பிரான்ஸ் அறிஞர்களுக்கு பௌதிகவியலுக்கான பரிசு**

பிரான்சின் ஆல்பேட் பெரட் மற்றும் ஜேர்மனியின் பீற்றர் குருன் பேர்க் ஆகிய அறிவியல் அறிஞர்கள், 2007ஆம் ஆண்டின் பௌதிகவியலுக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.

இதனை செய்தியாளர்களிடம் அறிவித்த சுவிடன் அக்கடமி கணனி, ஐபொட்ஸ் (I-pod) மற்றும் வேறு சில டிஜிற்றல் சானதங்களில் பயன்படுத்தப்படும் குறை வான அளவு கொண்ட ஹார்ட் டிரைவஸ்சை (Hard drives) கண்டுபிடித்தமைக்காக இவ்விருவருக் கும் இப்பரிசு வழங்கப்படுவதாகத் தெரிவித்தது.

**ஜேர்மனி விஞ்ஞானிக்கு இரசாயனவியலுக்கான நோபல் பரிசு**

ஜேர்மனியின் விஞ்ஞானி ஜெஹாட் ஏள் 2007ஆம் ஆண்டின் இரசாயனவியல் பிரிவுக்கானநோபல்பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஜெஹாட் ஏள்ளின் இரசாயன வியல் கண்டுபிடிப்புகள் . ஓசோன் படலத்தில் ஏன் துளை ஏற்படுகிறது என் பதை விளக்கு வதோடு, அதற் குத் தீர்வு காணவும் உதவுகிறது.

**மருத்துவத்துக்கான நோபல் பரிசு மூன்று விஞ்ஞானிகளுக்கு**

அமெரிக்க விஞ்ஞானிகளான மரியோ ஆர்.கப்பாச்சி, ஒலிவர் ஸ்மிதிஸ் மற்றும் பிரிட்டன் விஞ்ஞானி மார்டின் ஜே. ஈவன்ஸ் ஆகியோர் 2007ஆம் ஆண்டின் மருத்துவத் துக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர். *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

திரு. திருமதி ஸ்ரீஸ்கந்தராஜாவின் மகள்
**ஹேமாஷினிக்கும்**
திரு. திருமதி முத்துக்குமாரசாமியின் மகன்
**விதுரன் குமாரவேலுக்கும்**

16.09.2007 அன்று சிட்னி, ஆஸ்திரேலியாவில் கிராண்ட் வெஸ்ரெலா மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்திற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்களுக்கும் அதனைத் தொடர்ந்து, 15, உடையார் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

*இராஜரட்ணம் குடும்பம்*
*யாழ்ப்பாணம்.*

*இ.ஸ்ரீஸ்கந்தராஜா*
*குடும்பம்,*
*ஆஸ்திரேலியா.*

(66844)

## BBS இன் வித்தியாரம்பம் 2008

எதிர்வரும் விஜயதசமி அன்று B.B.S இன் அனைத்துக் கிளைகளிலும் வித்தியாரம்பம் (ஏடுதொடக்கல்) செய்து வைக்கப்படும்.
அன்று முதல் 2008ஆம் ஆண்டிற்கான பாலர் பாடசாலை அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.



### ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

| வயது 2+ முதல் வயது 3 வரை | வயது 3+ முதல் வயது 4 வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre-School |

2+ to 5+ குழந்தைகளுக்கான அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளளாம்.

**பாடசாலைமாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்**

6+ to 14+ சிறுவர்களுக்கான வகுப்புக்கள்

- Pre Foundation
- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

CERTIFICATE IN ENGLISH
DIPLOMA IN ENGLISH
-தவணை முறையில் கட்டணம் செலுத்தும் வசதி-

புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களுக்கு 50% கட்டணம்

IELTS
ஆங்கில அறிவை வளர்க்கவும், வெளிநாடு செல்ல இருப்போருக்குமான விசேட வகுப்பு. உங்கள் வசதிக்கேற்ப வகுப்புக்களில் இணைந்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு
இல:140,
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

BRITISH BUSINESS SCHOOL

## விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட், சவர்ச்சேவல் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விற்பனை

புறொயிலர் குஞ்சு 20.10.2007 பெற்றுக்கொள்ளலாம். முற்பதிவு செய்யவும். எம்மிடம் குஞ்சு எடுப்பவர்களிடம் மீண்டும் கோழி எடுக்கப்படும்.
நல்லூர் பாம், 19, முருகேசர் லேன்.

## புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்த புறொயிலர் 1Kg 600/- மட்டும். குமரன் பாம், 227, பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

(66722)

## வாடகைக்கு

அச்சுவேலி பிரதானவீதியில் (பஸ்நிலையம்) இரு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: T.தனராஜன்
தொ.பே: 0602212223. (67708)

## காணி விற்பனைக்கு

வடமராட்சி நகரசபை எல்லைக்கு உட்பட்டதும் அமைதியான, அழகான சூழலில் அமைந்ததும், பருத்தித்துறை பஸ்நிலையத்துக்கு அண்மையில் உரித்துக்கு உத்தரவாதம் வழங்கக்கூடிய வகையிலும் அமைந்த காணி ஒன்று உடன் விற்பனைக்கு உள்ளது. இக்காணியானது 2 பரப்பு விஸ்தீரணம் உடையதாகும். தேவையானோர் உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 024-2222429, 0773222740.

## வீடு விற்பனைக்கு

கோப்பாய், இராஜ வீதியில் மாஸ்ரர் கடைக்கு அண்மையில் 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: **சி.பாலசிங்கம்,**
இராஜ வீதி, கோப்பாய் தெற்கு.

## 'லயம்' நுண்கலை பயிலகம்


(வண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக)

### மிருதங்க வகுப்பு

புதிய மிருதங்க வகுப்புகள் 21.10.2007 ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி அன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகிறன. பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. 021 222 4017.
620, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆண்டு ஏழின் நினைந்துருகல்



அமரர்
**சுந்தரம் யோகானந்தா**

**தோற்றம்**
**20.10.1954**

**மறைவு**
**30.09.2000**

*திதி: திருதியை*
*(14.10.2007)*

ஏழாண்டின் பிரிவு எம்மை
ஏழ் பிறப்பிலும் தொடரும் அப்பா!

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள்.**

(66872)

## முதலாம் ஆண்டின் கண்ணீர்ப்பூக்கள்



அமரர்
நித்தியானந்தன் பாலரஜனி

**மலராய்**
**17.10.1967**

**சருகாய்**
**25.09.2006**

குலவிளக்கே:- ஆண்டொன்று சென்றது அம்மா!
ஆறவில்லை எம் துயரம் அம்மா!
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன?
அம்மா உங்கள் அன்பைப் போல் வருமா
பாரினில் நாங்கள் பாங்குடன் வாழ
பாசத்துடன் எம்மை வழி நடத்தினீர்கள் அம்மா!
உங்கள் இனிய நினைவுகள் என்றும்
எம்மை விட்டு நீங்காது அம்மா.


சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

பாசத்திற்கு ஏங்கும் பிள்ளைகள்
(குடும்பத்தினர்).

(66846)

## மரண அறிவித்தல்

### திருமதி பரிமளம் சிவகுரு



புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.56/5, நாமகள் ஒழுங்கை, பொற்பதி றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு பரிமளம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்- மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாரிமுத்து- தெய்வானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவகுருவின் அன்புத் துணைவியும் பகவதி (சுவிஸ்), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), முருகானந்தன் (கொழும்பு), சிவானந்தன் (சுவிஸ்), நித்தியானந்தன் (சுவிஸ்), திலகவதி, செல்வானந்தம் (சுவிஸ்), ஜெயவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் உதயகுமார் (சுவிஸ்), சிவகாமி (ஜேர்மனி), இந்திராணி, புவனேஸ்வரி (சுவிஸ்), சுசிகலா (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (கமலேஸ்வரி புடைவையகம், யாழ்ப்பாணம்), சுரேஜினி (சுவிஸ்), வேணீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சிவதர்சினி, பிரசன்னா, மயூரதன், றமிலன், பிரசாந், பிரதீப், மஞ்சுளா, மிகிந்தன், சிந்துஜா, கஜேந்திரன், அனுசாத், அனுசிகா, கிரிசாந், சுஜீபன், சபிஷா, டிசாந், சினேகா, சர்மிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கார்த்திகேசு காலஞ்சென்ற அமிர்தம்மா, லெட்சமி, நாகம்மா, நல்லம்மா, பாக்கியலெட்சுமி, சின்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கனகலிங்கம் (கொழும்பு), சண்முகநாதன் (சுவிஸ்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சிறியதாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

*இல. 56/5, நாமகள் லேன்,*
*பொற்பதி றோட்,*
*கொக்குவில்.*

*தகவல்:*
**முருகானந்தன் (மகன்),**
**ஜெகன் (மருமகன்).**

(66907)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியுடனான 5 ஆவது போட்டியில் இந்தியாவுக்குக் கிடைத்த படுதோல்வி! துடுப்பாட்ட வீரர்களே காரணமாம்!!

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 5 அவது ஒருநாள் போட்டியில் ஏற்பட்ட மிக மோசமான தோல்வியை மறந்து விடும்படி அணி வீரர்களுக்கு அணித் தலைவர் டோனி ஆலோசனை கூறியுள்ளார்.



இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான 5 ஆவது ஒரு நாள் போட்டி வதோதராவில் நடந்தது. இதில் இந்திய அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

இது குறித்து இந்திய அணியின் தலைவர் டோனி கூறியதாவது :-

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி வென்றது தவிர மற்ற அனைத்தும் நம் கையை விட்டு போய்விட்டது. இந்தத் தோல்வியை அனைவரும் மறந்துவிட வேண்டும்.

அடுத்த இரண்டு ஆட்டத்திலும் முழுத் திறமையையும் பயன்படுத்தி விளையாட வேண்டும். இதற்காகவாவது இந்தத் தோல்வியை நாம் மறந்தே ஆகவேண்டும்.

இந்தப் போட்டியில் டெண்டுல்கர் நன்றாக விளையாடினார். ஆர்.பி.சிங் - ஜாகீர்கான் ஜோடி சிறப்பாக ஆடியது. 200 முதல் 220 ஓட்டங்கள் வரை எடுத்திருந்தால் நன்றான இருந்திருக்கும். இவ்வாறு டோனி கூறினார்.

இந்திய அணியின் மோசமான துடுப்பாட்டத்துக்கு என்ன காரணம் என்பது குறித்து டோனி விளக்கம் அளிக்கவில்லை.

இந்திய அணியின் இந்தப் படுமோசமான தோல்விக்குத் துடுப்பிட்ட வீரர்களே காரணம் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தோல்வியின் மூலம் ஒருநாள் தொடரை இழந்தது இந்திய அணி.

### சாதனையைத் தவறவிட்டார் இன்சமாம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் தனது கடைசி டெஸ்ட் போட்டியில் மூன்று ஓட்டங்களில் சாதனையைத் தவறவிட்டார்.



தென்னாபிரிக்காவுக்கு எதிராக லாகூரில் நேற்று முன்தினம் நடந்து முடிந்த இரண்டாவது போட்டி, இன்சமாம் உல் ஹக்கின் கடைசி டெஸ்ட் போட்டி.

இப் போட்டியில் 20 ஓட்டங்கள் எடுத்தால் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் ஜாவித் மியான்டட்டின் ஓட்டக் குவிப்பு (8,832 ஓட்டங்கள்) சாதனையை முறியடித்துவிடும் நிலையில் களமிறங்கினார் இன்சமாம்.

ஆனால் முதல் இன்னிங்ஸ்சில் 14 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தார். இதனால் 6 ஓட்டங்கள் எடுத்தால் மியான்டட்டின் சாதனையை இன்சமாம் முறியடித்து விடலாம் என்ற நிலை உருவானது.

## தனது கடைசி டெஸ்ட் போட்டியில் சாதனையைத் தவறவிட்ட இன்சமாம்

இந்நிலையில் பாகிஸ்தானின் 2 ஆவது மற்றும் தனது கடைசி இன்னிங்சில் விளையாடக் களமிறங்கிய இன்சமாம், முதல் பந்தில் 3 ஓட்டங்கள் எடுத்தார். ஆனால் அடுத்த பந்திலேயே ஸ்டம்பிங் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

இதனால் பாகிஸ்தான் அணியில் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமையை 3 ஓட்டங்களில் இழந்தார் இன்சமாம்.

அதே நேரத்தில் இன்சமாம் பவிலியனுக்குத் திரும்பியபோது பாகிஸ்தான் வீரர்கள் அவருக்கு மரியாதை செய்தனர்.

அதன்பின் ஆட்ட முடிவில் பேசிய அவர் - "நான் விளையாடிய முதல்போட்டியில்நெருக்கடியான நிலையில் களமிறங்கினேன். அதைக் காட்டிலும் அதிக அளவிலான நெருக்கடி. என் கடைசிப் போட்டியிலும் இருந்ததை உணர்ந்தேன்" என்றார்.

### சச்சினுக்கு நினைவுப் பரிசு

400 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் டெண்டுல்கருக்கு பரோடா கிரிக்கெட் சங்கம் சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்தியாவின் நட்சத்திர ஆட்டக்காரரான டெண்டுல்கர் (34), கடந்த 1989 ஆம் ஆண்டு முதன் முதலாக இந்திய அணிக்காகக் களமிறங்கினார். அதிலிருந்து தொடர்ந்து விளையாடிவரும் அவர் அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்.

கிரிக்கெட் வீரர்களில் அதிக ஒருதினப் போட்டிகளில் விளையாடியவர்கள் பட்டியலில் 2 ஆம் இடத்தில் இருக்கிறார் டெண்டுல்கர். முதலிடத்தைத் தக்கவைத்துள்ள இலங்கை அணியின் ஜெயசூர்யா இதுவரை 401 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இந்நிலையில் தனிப்பட்ட முறையிலும் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார் டெண்டுல்கர். அதிக போட்டிகளில் அணியில் தொடர்ந்து இடம்பெற்றது. (185 தடவை) அதிக போட்டிகளில் ஆட்ட நாயகன் (55) விருது பெற்றது. அதிக முறை தொடர்நாயகன் (13) விருதுகளைத் தட்டிச் சென்றது போன்றவை இவரது சாதனைகளில் சில.

ஒருதினப் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்தவரும் இவரே. இதுவரை குவித்த ஓட்டங்கள் 15 ஆயிரத்தி 532. ஒரே ஆண்டில் அதிக ஓட்டங்கள் குவித்தவரும் (1998 இல் 1,894 ஓட்டங்கள்) டெண்டுல்கர்தான்.

ஒருதினப் போட்டிகளில் அதிகபட்சமாக 41 சதங்களையும் 84 அரைச் சதங்களையும் விளாசிய பெருமையும் இவரையே சாரும்.

இந்நிலையில் வதோதராவில் நடைபெற்ற இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான 5 ஆவது ஒருநாள் போட்டி சச்சினுக்கு 400 ஆவது போட்டியாகும்.

இதைப் பாராட்டி பரோடா கிரிக்கெட் அசோஷியேசன் சார்பில் வதோதராவில் சச்சினுக்கு சிறப்பு நினைவுப் பரிசு அளிக்கப்பட்டது.

### அக்தருக்கு 13 போட்டிகளில் விளையாடத் தடை

சக வீரரான முகமது ஆசிப்பை மட்டையால் அடித்த பாகிஸ்தான் வீரர் சொகைப் அக்தருக்கு அடுத்த 13 ஒருதினப் போட்டிகளில் விளையாட அந்நாட்டு கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.




மேலும் அவருக்கு 34 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு ருவென்ரி -20 உலக கிண்ணப் போட்டிகளில் ஏழு ஆட்டத்தில் விளையாடாததால் மீதமுள்ள போட்டிகள் இனிக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவித்தது.

இது தொடர்பாக அக்குழுவின் தலைவர் ஷவுகத் நக்மி கூறுகையில் -

நடைபெறவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் அக்தர் விளையாட மாட்டார் என்றும் அதறகடுத்து இந்தியச் சுற்றுப் பயணத்திற்கான வீரர்கள் தேர்வில் அவர் இடம்பெறுவார் என்றும் கூறினார்.

- டிலான் -

# முதுமையிலும் உற்சாகமாக இருப்பதற்கு விசேட காரணங்கள் இல்லை: சோம்பேறித்தனம் இல்லாமல் நாள் முழுவதும் உழைக்கின்றேன்..!



சர்வதேச முதியோர் வாரம் கொண்டாடும் இன்றைய காலகட்டத்தில் 100 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடிய தென்மராட்சி பிரதேசத்தின் மூத்த பிரஜையை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது.

சாவகச்சேரி சங்கத்தானை பொற்றொழிலாளர் வீதியில் வசிக்கும் சடையர் கார்த்திகேசு தனது 100 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியதாக அறிந்து அவரது இல்லத்திற்குச் சென்றிருந்தேன்.

அவரது இல்லத்திற்குச் சென்றபோது அவரது பேர்த்தி என்னை வரவேற்றார். குறித்த நபரின் பெயரைக் குறிப்பிட்டுக் கேட்டபோது பெரிய அரசடிச் சந்தியில் உள்ள தொலைத்தொடர்பகத்திற்குப் பத்திரிகை வாசிக்கச் சென்று விட்டதாகக் கூறி அவரை அழைத்து வர ஆளனுப்பினார்.

சிறிது நேரத்தில் குறைந்த உயரத்தில் (சுமார் 4 1/2 அடி) ஒருவர் நடந்து வந்து எனக்குப் பக்கத்தில் அமர்ந்து எனது நலத்தினை விசாரித்தார்.

### பகலில் நித்திரை கொள்வதில்லை

முதலில் வாழ்த்துக்கள் தெரிவித்து... 'உதயன் பத்திரிகை'யிலிருந்து அவரைப் பேட்டி காண்பதற்காக வந்திருந்ததாகத் தெரிவித்தேன். அவரும் உற்சாகத்துடன் எனது கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாரானார்.

100 வயதினைப் பூர்த்தி செய்துள்ள தங்களது இளமைக் காலம் தொடக்கம் இன்று வரை ஏற்பட்ட அனுபவங்களைத் தெரிவிக்க முடியுமா? எனக் கேட்டதற்கு.

சாவகச்சேரி நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் எனது பெற்றோருக்கு 1907 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 14 ஆம் திகதி மகனாகப் பிறந்தேன். எனக்கு ஒரு சகோதரியும் இருந்தார்.

நான் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்றுவிட்டு பெற்றோருடன் வசித்துவந்தேன். எங்களது வீட்டுக்குப் பக்கத்திலிருந்த சாவகச்சேரி முன்னாள் எம்.பி.வ.ந.நவரத்தினம் அவர்களின் தாயாரினதும் அவரது குடும்பத்தினரதும் விழிகாட்டலின் பேரில் எனது 15 ஆவது வயதில் நான் கப்பலில் மலேசியா சென்று தொழில் பார்க்கத் தொடங்கினேன்.

மலேசியா தந்த படிப்பினையே இன்று வரை என்னையொரு சுறுசுறுப்புள்ளவனாகச் செயற்படவைத்துள்ளது.

இருபது வருடங்களின் பின்னர் மலேசியாவிலிருந்து 1942 ஆம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பி வந்த நான் பெற்றோரின் விருப்பப் பிரகாரம் திருமணம் செய்து கொண்டு இங்கேயே தங்கிவிட்டேன்.

நான் மலேசியாவில் இருந்து கொண்டு வந்த பணத்தினைப் பயன்படுத்தி எனது தகப்பனார் பனந்தோப்புக்களையும் நெல் வயல்களையும் தோட்ட நிலங்களையும் வாங்கிவிட்டிருந்தார். அந்தச் சொத்துக்களே என்னையும் என் குடும்பத்தையும் வாழ வைத்தது.

### பெற்றோர் தேடித்தந்த சொத்துக்களும் குலதெய்வமுமே எனது வழிகாட்டிகள்

எனது பெற்றோர் தமது 85 ஆவது வயது வரை என்னுடைய பராமரிப்பிலேயே இருந்தனர். பெற்றோருடன் எனது சகோதரியும் அவரது கணவரும் எங்களுடனேயே நுணாவில் மேற்கில் தங்கியிருந்தனர்.

எனது பெற்றோர், சகோதரி, மைத்துனர் ஆகியோரின் மரணச் சடங்குகளை நானே தனியனாக நின்று நடத்தி முடித்தேன். எவரிடமும் எந்த உதவியும் கேட்கவில்லை. எனது பெற்றோர் தேடித் தந்த சொத்துக்களும், எங்கள் குடும்பத்தின் வழிபடும் தெய்வம் வைரவர் கடவுளும் எனக்குப் பெரும் வழிகாட்டி யாக அமைந்தன.

எனது மனைவி 25 வருடங்களுக்கு முன்னர் அதாவது எனது 75 ஆவது வயதில் என்னை விட்டுச் சென்ற பின்னர் சங்கத்தானையில் இருந்த எனது மகள் என்னைக் கவனித்து வந்தார்.

எனது வாழ்நாளில் வாகனங்களில் பயணம் செய்தது மிக மிகக்குறைவு. எங்கு சென்றாலும் கடவுள் கொடுத்த கால்களின் உதவியுடன் நடந்தே செல்வேன்.

மகளின் வீட்டில் தங்கியிருந்த காலத் தில் தினமும் காலை 5 மணிக்கு புறப்பட்டு நுணாவிலுக்குச் செல்லும் நான் - அங்கு 20 இற்கும் மேற்பட்ட மாடுகளைப் பராமரிப்பதுடன் தோட்டம், நெல்வயல் என்பவற்றைக் கண்காணித்து மாலை 6 மணிக்கு நடந்தே மகளின் வீட்டுக்கு வருவேன்.

எனது பேர்த்தியின் கணவர் (தங்கவடிவேல்) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் என்னை நுணாவிலுக்குச் செல்ல விடாமல் தனது வீட்டிலேயே தங்கவைத்துக் கொண்டார்.

நான்கு தலைமுறையினைக் கண்ட நான எனது மகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள் அனைவரும் நலமாக இருக்க வேண்டுமெனத் தினமும் இறைவனைப் பிரார்த்தனை செய்வேன்.

நான் மலேசியா நாட்டில் 20 வருடங்கள் உழைத்த போதிலும் புகைத்தல், மதுபானப் பாவனைபோன்ற பழக்கங்கள் எனக்கு ஏற்படவில்லை. அன்றைய காலம் தொடக்கம் இன்று வரை எமது நாட்டு உணவுப் பழக்கங்களையே எமது குடும்பமும் கைக்கொண்டதால் உணவு பற்றி விசேடமாகக் குறிப்பிடக் கூடியது எதுவுமில்லை.

கடின உழைப்பில் ஈடுபட்டபோதிலும் இன்றுவரை பகல் நித்திரைக்குப் பழக்கப்படவில்லை. இந்த நூறு வயதுக் காலத்தில் ஆஸ்பத்திரி மருந்துகளை நான் உட்கொள்ள நேர்ந்ததில்லை. எந்தவொரு நோய் நொடியும் என்னை அணுகவில்லை - என்றார்.

இருபது வருட காலமாகச் சங்கத்தானையில் தங்கியுள்ளதாகச் சொல்கிறீர்கள். இந்த வீட்டில் உங்களது பொழுதுபோக்குகள் என்னவென்று கூறுவீர்களா? என அவரிடம் கேட்டேன்.

உழைக்கத் தெரியாத சோமிபேறிகள் தான் வீட்டிலிருந்து சும்மா பொழுதைக் கழிப்பார்கள். ஆனால் நான் அப்படியல்ல. எனது மகளின் காணியையும் நான் தங்கியுள்ள பேர்த்தியின் காணியையும் பாருங்கள் (இரு வீடுகளும் அருகருகே உள்ளன) பல வகையான பூ மரங்கள் நிற்கின்றன. பூ மரங்களை வெட்டி ஒட்டும் கலை தெரிந்ததால் காணிகளை அழகுபடுத்தும் வகையில் பூங்கன்றுகளை வைத்துப் பராமரிக்கின்றேன். இதனை எனது நாளாந்த கடமைகளில் ஒன்றாக நினைத்துச் செயற்படுகிறேன்.

அத்துடன் விளக்குமாறு செய்யும் கைத்தொழில் தெரிந்ததால் நேரம் கிடைக்கும் வேளைகளில் அதனைத் தயாரித்து விற்பனைக்காகக் கடைக்குக் கொடுப்பேன் என்றார். அத்துடன் தற்போது தினமும் காலையில் எழுந்து பூங்கன்றுகள் பராமரிப்பு வேலைகள் முடிந்தபின்னர் காலை உணவு அருந்தி விட்டு பெரிய அரசடிச் சந்தியில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் உதவியாளராக இருந்து வருகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எனக்குத் தெரிந்தவர்களுக்கு கைரேகை பலன் பார்த்துச் சொல்வேன் என்றார். இவ்வயோதிபப் பெரியவரை அவதானித்தபோது அவரது கண் பார்வை கூர்மையாக இருந்ததை உறுதி செய்து கொள்ள முடிந்தது. பற்கள் நன்றாக இருந் தன. செவிப் புலன் கொஞ்சம் மந்தமாக இருந்தபோதிலும் ஓரளவு சத்தத்தைக் கிரகிக்கும் தன்மை இருந்ததை அவதானிக்க முடிந் தது.

இறுதியாக உங்கள் வாழ்க்கை நடை முறை அனுபவத்தை வைத்து பொது மக்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன? எனக் கேட்டேன்.

படிப்புத் தேவை, முன்னேற உழைப்புத் தேவை, உழைப்பைப் பயன் படுத்த நல்லோர்களின் ஆதரவு தேவை, எதனையும் சகித்துக்கொள்ளும் பண்பு தேவை இவ்வளவையும் ஒருவர் அனுசரித்து வந்தால் பன்நெடுங் காலம் நலமாக வாழலாம். அத்துடன் தன்னையே நம்பி வாழ்பவன் எதற்கும் கலங்க மாட்டான். அடுத்தவனை நம்பி வாழப் புறப்பட்டவன் தனது ஆயுட்காலத்தைக் குறைப்பவனாகவே கருதப்படுவான் என்றார். உதாரணத்திற்குத் தனக்குப் பொதுசன மாதாந்த உதவிப் பணம் (பிச்சைச் சம்பளம்) பெற்றுத் தரத் தமது பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவையாளர் முன் வந்தபோதிலும் தாம் அதனை ஏற்க மறுத்துவிட்டதாகவும் கூறினார்.

### இத்தனை வருடங்களாக நான் ஆஸ்பத்திரி மருந்து குடித்ததில்லை

உங்கள் பிரதேசத்தில் மூத்த பிரஜையாகக் கருதத்தக்க நூறு வயதினைப் பூர்த்தி செய்துள்ள நீங்கள் சர்வதேச முதியோர் வாரம் அனுஷ்டிக்கப்படும் இவ்வேளையில் எந்தவொரு பொது அமைப்பினாலாவது கௌரவிக்கப்பட்டீர்களா? என அவரை வினாவினேன்.

இதற்கு முன்னர் எந்தவொரு முதியோர் வார நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தனக்கு எந்தவொரு அழைப்பும் கிடைத்ததில்லை எனவும் எவரும் தன்னை மூத்த பிரஜையாகக் கருதி கௌரவம் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இம்முறை தனது 100 ஆவது பிறந்த தினத்தில் இலங்கை சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து பாராட்டுப் பத்திரம் வழங்கியதுடன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததாகவும் உறவினர்கள் பலர் மாலை அணிவித்துப் பரிசில்கள் வழங்கியதாகவும் தெரிவித்தார். மீண்டும் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து பேட்டியை நிறைவு செய்து விடைபெற்றேன். ★

சந்திப்பு:- பகவான்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குருட்டு வாழ்க்கை



1940களில் ஈழத்துச் சிறுகதைத் துறையில் கால் பதித்தவர்களில் அ.ந.க. என அழைக்கப்படும் அ.ந.கந்தசாமியும் ஒருவர். ஈழகேசரியில் நமது முதலாவது சிறுகதையை எழுதத் தொடங்கிய அவர், பின்னர் தேசாபிமானி, சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றிய போது நாற்பதுக்கும் மேற்பட்ட சிறு கதைகளை எழுதிக் குவித்தார்.

"மனங்கள்" என்ற நாவலையும் எழுதியிருக்கின்றார். கவீந்திரன் என்ற பெயரில் கவிதைகளையும் எழுதியிருந்தார்.

முற்போக்குக் கருத்துடையவர். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களைத் தமது எழுத்தில் பிரதிபலித்தவர். 1947 இல் எழுதிய இச் சிறுகதை அந்தக் காலத்தின் எழுத்து நடையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

எனது பழைய நண்பன் சேகரனை எதிர்பாராத விதமாக அன்று சந்தித்தேன்.

நான் றோட்டோரமாக பைசிக்கிளில் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுதுதான் அவன் வந்தான். என்கூடப் பள்ளிக்கூடத்தில் படித்த அதே ஆள்தான். நின்று கதைக்கவேண்டுமென்று தோன்றிற்று. நான் 'சேகரா' என்று கூறிக்கொண்டு பைசிக்கிளில் இருந்து இறங்கினேன். அதே ஆள்தான். சிவப்பு நிறம், சுருட்டை மயிர் எல்லாம் அப்படியே இருந்தன. ஆனால் அவன் கண்கள் குருடடைந்தவைபோல் காணப்பட்டன. நான் 'சேகரா' என்று மீண்டும் கூப்பிட்டேன். ஆனால் அவன் என்னை அறிந்துகொள்ளவில்லை. எனக்கொரு சந்தேகமுண்டாயிற்று: ஒருவேளை குருடாய்த்தான் போய்விட்டானோ?

''யாரது?'' என்றானவன்.

''என்ன தெரியவில்லையா? ராமலிங்கம், உன்னோடு படித்தவன்.''

''சா ராமலிங்கமா!'' என்று கூறியவண்ணம் அவன் என்னைப் பிடிப்பதற்குக் கையை நீட்டினான். அப்போது நான் கவனித்தேன். அவன் எங்கெல்லாமோ கையை அலைத்து விட்டுப் பின்னரே என்னைக் கண்டுகொண்டான்.

''என்ன சேகரா, கண்ணில் ஏதாவது கோளாறோ?''

''ஆமாம், நான் குருடனாய்ப் போய்விட்டேன். அதுதானே இந்தப் பிரம்பு?'' அவன் பிரம்பை மேலே உயர்த்திக் காட்டினான்.

நான் திகைத்துவிட்டேன். அவன் பள்ளிக்கூடத்தில் என்னுயிர்த் தோழன். அப்படிப்பட்டவன் குருடனாவதென்றால்...? எனக்குப் பெரிய மனக்கஷ்டமாயிருந்தது.

''எனக்கொன்றும் தெரியவில்லையே, விளங்கச் சொல்லன்.''

''அது ஒரு நீண்ட கதை. சொல்கிறேன்.'' என்று கூறி என்னென்னெல்லாமோ அறிவுரையின் பிறகு சொல்ல ஆரம்பித்தான்.

''நான் இப்போது குருடாகியிருப்பது இரண்டாவது தடவை. அதாவது முதல் ஒருதரம் குருடாகிச் சொஸ்தமானேன். பிறகு நானே என்னை மறுபடியும் குருடாக்கிக்கொண்டேன்.''

''உன்னுடைய புதிர் எனக்கு விளங்கவில்லை. விளங்கும்படி சொல்லு. அந்த மரநிழலில் போயுட்கார்ந்து சம்பாஷிப்போம் வா'' என்றேன் நான்.

இருவரும் போயுட்கார்ந்தோம். அவன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

''உனக்கு நாங்கள் பள்ளிக்கூடத்தில் படித்த காலம் நினைவிலிருக்கிறதா? எவ்வளவு சந்தோஷமாய்க் காலத்தைக் கழித்தோம். அதை இப்போது நினைத்துப்பார்த்தால் ஏதோ அரைகுறையாய் நினைவிலிருக்கும் சொப்பனம்போல்தான் எனக்குத் தோன்றுகிறது. அப்போது நீதானே என் உயிர்த் தோழன்? இப்படி அரைவாசியில் நாங்கள் ஒருவருடன் ஒருவர் சம்பந்தமில்லாது போய்விடுவோமென்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. அந்தக்காலத்தில் உன்னைக் காணாது ஒருநாளைக் கழிப்பதென்றால் எனக்கெவ்வளவு மனக்கஷ்டமாயிருந்தது? அப்படிப்பட்ட இரண்டு சிநேகிதர்கள் இவ்வளவுகாலம் பிரிந்திருந்தது ஒருவரையொருவர் காணாமல் – ஒருவர் புதினம் ஒருவருக்குத் தெரியாது – இப்படியெல்லாமிருப்பது ஆச்சரியமில்லையா?''

அவன் இங்கே கதையை நிற்பாட்டி ஒரு பெருமூச்சு விட்டான் 'இதென்னடா, கதையைச் சொல்லாமல் இவன் வேறு ஏதேதோ சொல்கிறான்' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். அவன் தொடர்ந்தான்;

''ஆமாம், உனக்கொன்றுந் தெரியாது. உன்னிடம்தான் என் அந்தரங்கங்களையெல்லாம் சொல்லுவது வழக்கம். ஆனால் உன்னிடம் கூட நான் அவளைப்பற்றிச சொல்லியது கிடையாது.

அவள் எங்கள் பாடசாலைக்கணித்தாயிருந்த பெண்கள் கல்லூரியில் மற்றிக்குலேஷன் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். எங்களுக்கிடையில் எப்படியாக முதன்முதல் பரிச்சயமுண்டாயிற்று என்று எனக்கு நினைவில்லை. ஆனால் நாங்கள் எப்படியோ உயிர்க் காதலராகி விட்டோம்.

அவளையேயல்லாமல் வேறொருவரையும் மணப்பதில்லை என்று அந்தரங்க சுத்தியாக நான் அவள் முன்னிலையில் எத்தனையோ தடவை கூறியிருக்கின்றேன். ஆனால் விதிதான் ஒன்று எதற்கும் குறுக்கே நிற்கிறதே? மனப்பூர்வமாக என்னைக் காதலித்து வந்த அவளுக்கும் எனக்கும் எதிராக அது சதிசெய்துவிட்டது. நான் படிப்பு முடிந்து எனது கிராமத்திற்குச் சென்றேன். அங்கு சென்றபிறகு அவளிடமிருந்து எனக்குப் பல கடிதங்கள் வந்தன. ஒவ்வொன்றும் உணர்ச்சிப் பிரவாகமாயிருக்கும். அவற்றைக் காணும்போது அவளையே காண்பதுபோல் எனக்குத் தோன்றும். ஏதோ கிட்டாத பாக்கியத்தை அடைந்து விட்டதுபோல் நான் புளகாங்கிதமாவேன். ஆனால் இது தெய்வத்துக்குப் பொறுக்கவில்லையோ? அவளுடைய மோஹன சொருபத்தை நீண்டகாலம் நான் கண்டு களிக்கவில்லை.

கண்கெட்ட கடவுள் என் கண்களைக் கெடுத்துவிட்டது. எங்களூரில் இருந்தாற்போலிருந்து அம்மைநோய் திடீரெனப் பரவ ஆரம்பித்தது. எங்கள் வீட்டில் என்னுடைய தாயாருக்கும் எனக்கும் அம்மை வார்த்தது. அதனால் நான் குருடானேன். இரண்டு கண்களும் பொட்டையாகி விட்டன. ஆனால் வேறு இடங்களில் ஒரு குருடனுக்கேற்படக்கூடிய கஷ்டம் எனக்கேற்படவில்லை. எனக்கு வேண்டிய பண வருவாயிருந்தது. ஆகையினால் வாழ்க்கைக்கு உழைக்க வேண்டுமென்று இருக்கவில்லை.

எனக்கு இருபத்தைந்து வயதாகியிருந்த்து. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நான் ஒரே ஒரு செல்லப்பிள்ளை. எனக்குக் கலியாணம் கட்டிவைத்துவிட வேண்டுமென்று அவர்களுக்கு ஆவலாயிருந்தது. வேண்டிய பொருள், படிப்பு, அழகு, குணம் எல்லாம் எனக்கமைந்திருந்தபடியால் 'குருடனாகிவிட்டானே' என்றும் பார்க்கமாட்டார்களென்பது அவர்களது எண்ணம். ஒருநாள் இதைப்பற்றி என்னோடு கதைத்தார்கள். நான் கலியாணம் முடிப்பதென்றால் இப்படி 'அட்வகேட் சிங்காரவேலுவின் மகள் ராஜம்மா என்ற பெண் பட்டினத்தில் என்கூடப் பரிச்சயமாயிருந்தவள், அவளைத்தான் கலியாணம் பண்ணிக்கொள்வேன். இல்லாவிட்டால் இல்லை' என்று தீர்க்கமாய்க் கூறிவிட்டேன்...'' இங்கு கதையை அவன் நிறுத்தினான்.

எனது மனம் படபடத்தது. 'திகீர்' என்ற உணர்ச்சி என்னுடம்பில் ஓடிச்சென்றது. நான் அதை மறைத்துக்கொண்டு கேட்க ஆரம்பித்தேன். அவன் தொடர்ந்தான்.

''நான் எனது முடிவைத் தெரிவித்து விட்டேனா? பின்னர் என் மனத்தில் ஒரு சந்தேகமுண்டாகியது. ராஜம் நான் குருடென்று தெரிந்து என்னை மணக்க மறுத்துவிட்டால்...? ஆனால் அவள் கொண்டுள்ள காதல் எவ்வளவு உண்மையானது என்று எனக்குத் தெரிந்திருந்தபடியால் அந்தச் சந்தேகத்தை மேலும் நான் வளரவிடவில்லை. அப்படி ஒன்றும் நேராது என்று திடப்படுத்திக் கொண்டேன்.

சில நாள்கள் சென்றபின் என்னுடைய தந்தையார் என்னைக் கூப்பிட்டு, துக்கமும், சோர்வும் கலந்த குரலில் சொன்னார்:

''நீ சொன்ன பெண்ணின் தகப்பனார் சிங்காரவேலுவைக் கண்டேன். அவருக்கு எல்லாஞ் சம்மதந்தான். ஆனால் உன் கண்கள் பொட்டையென்பதால்'' அவர் இதை கூறும்போது தேம்பியழ ஆரம்பித்துவிட்டார். என்னாலும் தாழ முடியவில்லை. என் மனமும் மிக வருந்திற்று.

இதற்கு இரண்டு வாரங்களின் பிறகு பின்னரும் என்னைக் கூப்பிட்டுக் கதைக்க ஆரம்பித்தார்:

''வேறோரு இடத்தில் ஒரு பெண் பார்த்திருக்கிறேன்.''

''எனக்கு வேறோரு பெண்ணும் வேண்டாம்.''

''என்னடா செய்வது? நீ கொடுத்து வைத்தது அவ்வளவு. இவளும் நல்ல அழகு.''

எனக்குச் சிரிப்பு வந்தது.; ''காணக் கண்ணில்லை. அழகிருந்தென்ன பிரயோசனம்?''

''மேலும் படித்திருக்கிறாள். நன்றாய்ப் பாடுவாள்.''

''அதெல்லாம் அவளோடேயே இருக்கட்டும். நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை. அப்பா; என்னைத் தொந்தரவு படுத்தாதேயுங்கோ.''

இது நடந்து இரண்டு மாதம் கடந்தது. பின்னருமொருதரம் என்னைக் கூப்பிட்டுக் கதைத்தார். இந்தமுறை அவருடைய பேச்சு உற்சாகமாயிருந்தது. மகிழ்ச்சி பொங்குவது போலிருந்தது.

''அட்வகேட் சிங்காரவேலுவைப் பின்னரும் கண்டேன். கடைசியாய் நிச்சயமாகிவிட்டது. நீ சொன்ன பெண்ணே உனக்குக் கிடைத்துவிட்டாள்.''

எனக்கென் காதுகளை நம்பமுடியவில்லை. எனது குருட்டுக் கண்களில் ஒளிவந்து சேர்ந்து விட்டது போன்ற சந்தோஷமுண்டாயிற்று. கடைசியில் என் ராஜம் எனக்கேயாகிவிட்டாளென்று மகிழ்ந்தேன்.

கலியாணமும் ஆர்ப்பாட்டமாய் முடிந்தது. குருட்டுக் கண்ணுடன் அவள் கழுத்தைத் தடவிக் கண்டுபிடித்து நான் தாலியைக் கட்டும்பொழுது என் கண்களில் ஜலம் ததும்புவதுபோலிருந்தது. ஆனந்த பரவசத்தால் உண்டாகிய கண்ணீர் அது. 'குருடனாகிவிட்டேனே' என்று நினைத்து நான் விட்ட கண்ணீர் என்று சிலர் அதைக்கருதியிருக்கலாம்.

ஆனால் என்ன ஆச்சரியம்! கலியாணமாகி இரண்டு நாள்கள் கடந்தன. நான் பள்ளிக்கூடத்தில் படித்த ராஜம்மாவை நேசித்ததுபோல் இப்போதிருக்கும் ராஜம்மாவை நேசிக்க முடியவில்லைபோல எனக்குத் தோன்றியது. இவ்வளவுக்கும் நானவளிடத்தில் ஒரு வித்தியாசத்தையும் காணவில்லை. மூன்று வருடங்களின்முன்னர் கேட்ட அவள் குரலுக்கும், இப்போது கேட்ட குரலுக்கும் எனக்கு வித்தியாசந்தோன்றவில்லை. அவள் நடந்ததைப் போல்தான் இவளும் நடந்தாள். அவள் சிரித்து விளையாடியதுபோல்தான் இவளும் சிரித்து விளையாடினாள். ஆங்கிலங் கலந்து பேசினாள். ஆனாலும் என் மனதில் ஒரு அதிருப்தியிருந்தது. ஆனால் அவள் நான் குருடனென்பதை லட்சியம்செய்யாது மிக நேர்மையாக நடந்துகொண்ட முறையும், அன்பொழுகப் பேசிவந்த ரீதியும் எனக்கு ஆச்சரியத்தையும், அவளிடம் ஒருவித நன்மதிப்பையும் பெருக்கிக் கொண்டு வந்தன.

ஒரு வாரந்தான் கழிந்தது. எனது நண்பன் வரதன் என்னைப் பார்க்கவந்தான். அவன் என்னிடம், ''பட்டினத்தில் ஒரு 'ரஷ்யன் ஐ ஸ்பெஷலிஸ்ட்' (கண் வைத்தியர்) வந்திருக்கிறார். உன்னைப்போல் இடையிட்டு வந்த குருட்டைச் சில இடங்களில் சொஸ்தமாக்கியிருக்கிறாராம். ஏன் நீயும் அவரிடம் போய் சிகிச்சை பெறக்கூடாது?'' என்று கூறினான்.

எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ஆனால் சொஸ்தமாகிவிட்டால்...? ஆகா! எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? ராஜம்மாவுக்கு மனத்தில் ''என் கணவன் குருடன்'' என்ற குறை – கவலையிருந்தால் அது நீங்கிவிடுமே! அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள்.

கடைசியாய், 'எதற்கும் பார்ப்போம்' என்று கிளம்பிவிட்டேன். ஒரு ஒன்றரைமாத காலத்தின் பின்னர், ஆச்சரியப்படும் படியாய் எனக்கு தெளிவான கண்பார்வை ஏற்பட்டுவிட்டது. என்னுடைய தகப்பனார் பட்ட சந்தோஷம் சொல்லி முடியாது.

ஐயாயிரம் ரூபாவை டாக்டருக்கு 'பீஸா'கக் கொடுத்தார். வழிநெடுக ராஜாத்திக்கேற்படக் கூடிய சந்தோஷம்பற்றி மனராஜ்யம் செய்தபடியே வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டு வாசலில் ஆவலும் மகிழ்ச்சியும் பொங்குகின்ற முகத்துடன் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். என்னை ஆச்சரியத்துடன் நோக்கினாள். ஆனாலிவள் ஏன் இங்கு வந்தாள்? ஒருவேளை ராஜத்தின் சிநேகிதி யாராவதாயிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டே உள்ளே போனேன்.

''ராஜம், ராஜம்'' என்று ஆவலுடன் கூவினேன்.

''என்ன'' என்றுகொண்டே அந்தபெண் என்னிடம் ஓடிவந்தாள்.

''உன்னையல்ல ராஜம் எங்கே? காணவில்லை?''

அவள் என்னைப் பரிதாபகரமாய்ப் பார்த்தாள். ''நான் தான் ராஜம். என் பெயர் கமலா. உங்களுடைய தகப்பனார்தான் அந்தப் பெயரை எனக்கு வைத்தார்'' என்று அந்தப்பெண் தழதழத்த குரலில் சொன்னாள்.

நான் திகைத்துவிட்டேன். என்னால் பேசமுடியவில்லை. 'இது இமிட்டேஷன் ராஜம். அதனால்தான் இவளை அவள்போல் நேசிக்க முடியாதிருந்தது என்று கண்டுகொண்டேன். என் மனத்தில் ஏதோ பெரிய சூறாவளி ஏற்பட்டுவிட்டது போலிருந்தது. ஒன்றும் பேசாமல் என் அறைக்கு ஓடினேன்.

நான் அங்கே செய்யத் துணிந்து செய்து முடித்துவிட்ட காரியத்தை நினைக்க இப்போதும் மனநடுக்கமுண்டாகிறது. ஒரு முரட்டு உணர்ச்சி என்னை அந்நேரத்தில் ஆட்டிவைத்தது. மேசையிலிருந்த ஒரு குண்டூசியை எடுத்து ஏமாற்றமடைந்த என் கண்களை நானே குத்திக்கொண்டேன். அப்படி நான் குத்திக்கொண்டு விட்டாலும் நல்லதாய்த்தான் போயிற்று. இல்லாவிட்டால் பொன்னிருதயம் படைத்த அந்த உத்தம மனைவியை நான் அவளை நேசிக்க வேண்டியளவு நேசித்திருக்கமாட்டேன். விழித்துக்கொண்டிருக்கும் போது அவளை என் ராஜம்மாபோல் கருத முடியவில்லை. ஆனால் குருடாகியிருக்கும் பொழுது அவளிடம் ராஜத்தின் அம்ஸங்கள் தலைதூக்கி நிற்பதைக் காண்கிறேன். இப்பொழுது நீ என்னைக் கேட்டாயானால் அந்த ராஜத்தைவிட இவளை மேலாக நேசிக்க நான் கற்றுக்கொண்டேன். அவளே இந்தக் குருடனுக்குக் கண்ணாய் விளங்குகிறாள்.''

அவன் இங்கு நிறுத்தினான். அவனுடைய மனத்தில் ஒருவித சாந்தம் பிறந்ததுபோலிருந்தது. அவன் முகத்தில் ஒருவித அமைதி நிலவிற்று. ராஜம்மாவைப் பற்றி எனக்குத் தெரிந்த கதையைச் சொல்லி அவனைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. 'நான் போய்வருகிறேன்' என்று கிளம்பினேன். வழிநெடுகிலும் ஒரே சிந்தனை. என்னுடைய மனைவியைப் பற்றித்தான் என் மனதில் நெடுங்காலமாக விடைதேடிக்கொண்டிருந்த ஒரு கேள்விக்கு இன்றுதான் மறுமொழி கிடைத்தது. நான் ஆபீஸிலிருந்து நேரஞ்சென்று திரும்பும் சிலநாள்களில் அவள் கண்கலங்கிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்ததைக் கண்டிருக்கிறேன். தன் நிர்ப்பிரயோசனமான இளமைக் கனவுகள் பலிதமாகாததையிட்டுத்தான் அவள் அப்படி உள்ளம் வெதும்பியிருக்கவேண்டும். அவள் மனக்குறைவுக்கு இந்த ஜன்மத்திலை மருந்து கிடைக்கப்போவதில்லை. ஒருவேளை மறுஜன்மத்தில் கிடைக்குமோ? (1942)

நன்றி: ஈழகேசரிச் சிறுகதைகள்.

# அந்த நான்கு பேர் யார்?



ஒரு ராஜா சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறார். அவர் எதிரில் பண்டிதர்கள். அந்தப் பண்டிதர்களுக்குத் தலைவர் ஒருவர் உள்ளனர்.

அந்தத் தலைமைப் பண்டிதரிடம் மன்னர், "தலைமைப்பண்டிதரே! நான் இப்போது ஒரு நான்கு பேரைப் பற்றிச் சொல்வேன். அந்த நால்வரையும் நாளை நீங்கள் என் முன்னால் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்! முடியுமா உங்களால்?" என்றார்.

"கூறுங்கள் மன்னா. முயற்சிக்கிறேன்!" என்றார் தலைமைப் பண்டிதர்.

ராஜா சொல்ல ஆரம்பித்தார்: "நான் சொல்லப்போகிற முதல் நபர் யார் தெரியுமா?

அவர் இங்கேயும் ஆனந்தமாக உள்ளவர் – அங்கேயும் ஆனந்தமாக உள்ளவர் – இவர் முதல் ஆள்.

இங்கே வருந்துபவர் – அங்கேயும் வருந்துபவர். இவர் இரண்டாவது ஆள்.

மூன்றாவது ஆள் எப்படி என்றால் இங்கே மகிழ்ச்சியாக இருப் பவர் – அங்கே வருந்துபவர்!

நான்காமவர் இங்கே வருந்துபவர் – அங்கே மகிழ்பவர்!

"இந்த நான்கு பேரையும் நாளை நம் அரண்மனைக்கு அழைத் துவந்து என் முன் நிறுத்துங்கள்" [illegible] ராஜா.

பண்டிதர் யோசித்துப் பார்த்தார். ராஜா சொன்ன அந்த நான்கு பேர் யார் என்று அவருக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் ராஜா சொன்னபடி அந்த நால்வரை நாளைக்கு அழைத்துக் கொண்டு வரவில்லை என்றால் தண்டனை கிடைக்கும். என்ன செய்வது?

கவலையுடன் வீட்டுக்கு வந்தார் அவர். தம் மகளிடம் விவரத் தைக் கூறினார். அவள் புத்திசாலி "அப்பா, கவலையை விடுங் கள். பிரச்சனையை நான் தீர்த்து வைக்கிறேன்!" என்றாள் அவள்.

"எப்படி, உன்னால் முடியுமா? அந்த நான்கு பேர் யார் என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். "தெரியும்" என்றாள் அவள்.

பிறகு விவரத்தையும் கூறினாள். "அப்பா! இங்கே பக்கத்தில் ஓர் ஆச்சிரமம் இருக்கிறது. அதில் ஒரு துறவி இருக்கிறார். அவர் தான் முதல் நபர். அவர் இங்கும் மகிழ்ச்சியாய் இருப்பவர். அங்கும் மகிழ்ச்சியாய் இருப்பவர்!"

"அதோ எதிரில் நின்று கொண்டிருக்கும் பிச்சைக்காரரே இரண் டாம் நபர். அவர் இங்கும் வருந்துகிறார். அங்கும் வருந்துவார்.

"நம் வீட்டுக்கு எதிரிலுள்ள பங்களாவில் ஒரு பணக்காரர் இருக் கிறார். மோசமான குணமுடைய அவர் இங்கே மகிழ்ச்சியாய் இருப் பவர். அங்கே வருந்தக்கூடியவர். இவர்தான் மூன்றாவது ஆள்.

"நான்காவது ஆள், ஒரு முனிவர். காட்டில் கடுந்தவம் செய்கிறார். அதனால் உடம்பு இளைத்துப் போயுள்ளது. அவர் இங்கே வருந்துகிறார். அங்கே சந்தோஷமாக இருப்பார்.

"இவர்கள்தான் நம் ராஜா கூறிய அந்த நான்கு பேர்" என்று சொன்னாள் அந்தச் சிறுமி!

பண்டிதர் யோசித்தார். பளிச்சென்று உண்மை விளங்கியது! உடனே அந்த நான்கு பேரையும் அரண்மனைக்கு அழைத்துப் போனார். ராஜா முன்பு நிறுத்தினார். ராஜாவுக்குப் பரம திருப்தி. பண் டிதரைப் பாராட்டிப் பரிசளித்தார்.

இங்கே மகிழ்ச்சியாய் இருக்கப் பொருள் வேண்டும். அங்கே மகிழ்ச்சியாய் இருக்க அருள் வேண்டும். இருந்தாலும் பொருளை விட அருளே சிறந்தது. அருளாளர்கள் எங்கேயும் ஆனந்தமாய் இருப் பார்கள்.

எனவே நமக்குப் பொருள் நாட்டமும் தேவை. அதோடு அருள் நாட் டமும் இருந்தால்தான் எங்கேயும் ஆனந்தமாய் இருக்க முடியும் என்று இந்தக் கதை மூலம் சுவாமி சிவானந்தர் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி மக்களின் பிணிதீர்க்கும் சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனையின் புனர்நிர்மாணப் பணிகள் கிடப்பில்!

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனை கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கபட்டு, 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரை சிறப்பாக-சகல வளங்களும் நிறைந்த மருத்துவமனையாக இயங்கி வந்தது.

நிர்வாக அலகு, வெளிநோயாளர் பிரிவு, மருந்தகம், பல் சிகிச்சை பிரிவு, ஆய்வுகூடம், ஆண்கள், பெண்கள், சிறுவர் ஆகியோருக்கு விடுதிகள், மகப்பேற்று பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றுடன் கிளினிக் பிரிவு போன்ற நோயாளருக்குரிய மருத்துவக் கட்டடங்களும், மாவட்ட வைத்திய அதிகாரி, வைத்திய அதிகாரி, உதவி வைத்திய அதிகாரி, தாதியர், சிற்றூழியர் ஆகியோருக்கான வசிப்பிட(குவாட்டஸ்) கட்டடங்களும் மருத்துவர் ஒய்வு அறை, மருந்துக் களஞ்சியம், சமையல் அறை, பிரேத பராமரிப்பு அறை உட்பட பல கட்டடங்களுடன் மக்களுக்கு வைத்திய வசதிகளை வழங்கி வந்தது.

இந்த மருத்துவமனையில் மாவட்ட வைத்திய அதிகாரி யின் பொறுப்பில் இரண்டு வைத்திய அதிகாரிகள், மூன்று பதிவு பெற்ற வைத்திய அதிகாரிகள், பல் சிகிச்சை நிபுணர், முதன்மைத் தாதி (மேற்ரன்), தலைமையில் இருபதுக்கு மேற்பட்ட தாதியர், அறு பதுக்கு மேற்பட்ட சிற்றூழி யர்கள், எழுதுநர் ஆகி யோர் பணியாற்றி வந் தனர்.

> கட்டடப் பொருள்களுக்கான தட்டுப்பாடே காரணமாம்

இவர்களுடன் யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர்கள் வாரத்தில் ஒரு தடவை வைத்தியசாலைக்கு விஜயம் செய்து சிகிச்சை நிலையங்களை நடத்தினார்கள்.

### தென்மராட்சியின் ஒரேயொரு மருத்துவமனை

தென்மராட்சி பிரதேசத்துக்கென வைத்திய சாலை இயங்கிய போதிலும் ஏனைய பிரதேச மக்களும் இங்கு மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்தனர். யாழ். போதனா வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக அதிக அளவு நோயாளருக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவமனையாக சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனை விளங்கியது. வருடத்தில் சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வந்துள்ளமை பல வருடங்களின் புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகாத நிலையில் உள்ள கட்டடம்



இவ் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய அதிகாரிகள் உட்பட அனைத்து உத்தியோகத்தர், ஊழியர்களின் சிறந்த சேவையை இந்த புள்ளிவிவரங்கள் சான்று பகர்கின்றன.

நற்சேவை வழங்கி வந்த இந்த மருத்துவமனையின் புகழுக்கு ஆப்பு வைத்தாற் போல் 2000 ஆம் ஆண்டு யுத்த நடவடிக்கை அமைந்தது. 2000 ஆம்ஆண்டு பிரதேச மக்கள் ஒட்டு மொத்தமாக இடம்பெயர்ந்து 2002 ஆம் ஆண்டு மக்கள் இப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய போது வைத்தியசாலைக் கட்டடங்கள் இருந்த நிலை எவராலும் மறக்க முடியாது. மருத்துவமனை வளாகத்தில் இருந்த கட்டடங்கள் அனைத்தும் சேதம் அடைந்து பாவிக்க முடியாத நிலையில் காணப்பட்டன.

இவ் வைத்தியசாலையை மீண்டும் இயக்குவதா? அல்லது கைவிடுவதா? என்ற சர்ச்சை சுகாதாரத் திணைக்களத்துக்கு ஏற்பட்டது. வைத்திய சாலையைப் புனர்நிர்மாணம் செய்ய பல மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டது.

இவ் வைத்தியசாலையை மூடி விடுவதற்கு முதலில் திட்டமிடப்பட்ட போதிலும் மீளக்குடியமரும் மக்களின் வைத்திய தேவை கருதி ஒரு கட்டடத்தை புனரமைத்து வெளிநோயாளர் பிரிவு ஆரம்பிக்கபட்டது.

ஆரம்பத்தில் ஒர் உதவி மருத்துவ அதிகாரியின் வெளிநோயாளர் பிரிவு ஆரம்பிக்கபட்டது. ஆரம்பிக்கபட்டு ஆறு மாத காலத் தினுள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தது.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்ப மருத்துவர்கள் ஊழியர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண் டிய நிலை சுகதாரத் திணைக் களத்திற்கு ஏற்பட்டது. தினமும் 300இற்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந் ததால், ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டியிருந்தது. அத்துடன் மருத்துவமனையில் விடுதிவசதி இல்லாததால் அவசர நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல நோயாளர் காவு வண்டி (அம்புலன்ஸ்) சேவையும் வழங்கப்பட்டது. விடுதிகளில் சேர்க்க வேண்டிய நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் நிலை காணப்பட்டதால் தினமும் குறைந்தது நான்கு அல்லது ஐந்து தடவைக்கு மேல் நோயாளர் காவு வண்டி சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

### மீள்புனரமைப்புப் பணி ஆரம்பமானது

அவ்வேளையில் மருத்துவமனைக்கு பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பதிவு பெற்ற வைத்திய உத்தியோகத்தரின் முயற்சியினால் வைத்தியசாலையில் கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் ஒத்துழைப்புடன் இரு கட்டடங்கள் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு ஒன்றில் ஆண்கள் விடுதி யும், ஒன்றில் பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுதியும் பிரசவ விடுதியும் இயங்கத் தொடங் கின.

இதனால் அவசர நோயாளர் தவிர்ந்த ஏனையநோயாளர்கள் விடுதிகளில் தங்கி சிகிச் சை பெற முடிந்தது. பின்னர் யாழ்.அரச அதிபரினால் வழங்கப்பட்ட 13 லட்சம் ரூபா நிதி உதவியுடன் சத்திரசிகிச்சைப் பிரிவுக் கட்டடம் புனரமைக்கப்பட்டு ஆண்கள் விடுதியாக மாற்றப்பட்டு இன்று வரை இயங்கி வருகிறது.

சாவகச்சேரிக்கு விஜயம் செய்த வெளிநாட்டு பிரதிநிதிகள், வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கு பெருமளவு நிதி வழங்குவதாக வாக்குறுதியளித்துச் சென்றனர்.

### ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியநிதியுதவி

வைத்தியசாலையினை சகல வசதிகளும் கொண்ட போதனா தர வைத்தியசாலையாக மாற்ற பல லட்சம் ரூபா செலவில் வரைபடம் தயாரிக்கப்பட்டது. வரைபடத்தின்படி கட்டடங்கள் அமைக்க நீண்ட காலம் செல்லலாமென கருதிய அப்போதைய மருத்துவமனை பொறுப்பதிகாரி தற்போது அவசியமான வைத்தியப் பிரிவான மகப்பேற்று விடுதியினை அமைத்துத் தருமாறு பல்வேறு பிரிவினருக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

வேண்டுகோளுக்கு செவிசாய்த்த ஆசிய அபிவிருத்தி வங்கி நிக்கொட் நிறுவனத்தின் மூலம் 2004ஆம் ஆண்டு மருத்துவமனை வளாகத்தில் மகப்பேற்று பிரிவுக் கட்டடத்தை நிர்மாணித்து வழங்கி அது தற்போது பிரசவத் தாய்மார் சிரமமின்றி சிகிச்சை பெற வாய்ப்புகளாக அமைந்தது.

மேலும் மருத்துவமனை வளாகத்தில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுக்கு ஜப்பான் நிறுவனத்தினரும், ஆண்கள், பெண்கள் மருத்துவசிகிச்சைப் பிரிவு, நிர்வாக அலகுப் பிரிவு ஆகியவை இரு மாடிக் கட்டடங்களாக நிர்மாணிக்க தற்போதைய அரச அதிபர் 'நிக்கொட்' நிறுவனம் ஊடாகவும் நிதி ஒதுக்கினர். அத்துடன் வைத்திய அதிகாரி[illegible] நிர்மாண[illegible] நிதி ஒதுக்கப்[illegible] நிர்மாண வேலைகள் நடைபெற்று வரும் வேளையில் கட்டடப் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக 2006ஆம் ஆண்டு நிர்மாண வேலைகள் இடை நிறுத்தப்பட்டு இன்று வரை வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.



யுத்தத்தினால் சேதமடைந்த வைத்தியசாலை

அண்மையில் உளவளநிலையப் பொறுப் பதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க உலக சுகாதார ஸ்தாபனம் ஒன்பதரை லட்சம் ரூபா செலவில் உளவள சிகிச்சை மண்டபத்தினை அமைத்துக் கொடுத்துள்ளது.

2002இல் வெளிநோயாளர் பிரிவுடன் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் விடுதி வசதிகளும் ஏற்படுத்தப்பட்டதால் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால் மருத்துவமனைக்கு தேவையான வசதிகளை வழங்க சுகாதாரத் திணைக்களம் முன்வந்தது.

மருத்துவ அதிகாரி, பல்சிகிச்சை நிபுணர், ஆய்வு கூட உத்தியோகத்தர், வேலை மேற் பார்வையாளர்கள், சிற்றூழியர்கள் இங்கு கடமைக்கு அனுப்பப்பட்டனர். நோயாளர் எண்ணிக்கைக்கு ஏற்ப விடுதிகளில் கட்டில் வசதி குறைவாக இருந்ததால் நிலங்களில் நோயாளர்கள் தங்க வைப்பதுடன் மேலதிகமாக உள்ளவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.



பிரேத அறையின் நிலைமை இது

### பிரேதஅறை, சமையலறை இதுவரை இல்லை

இவ்வாறு சிறந்த வைத்திய சேவையினை வழங்கி வரும் இந்த வைத்தியசாலையில் இது வரை பிரேத அறை வசதி செய்து கொடுக்காதமை பெரும் குறையாக உள்ளது. வைத்திய சாலை பிரேத அறையைப் புனரமைக்க மூன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஒரு வருடத்திற்கு முன்னர் ஒரு தகவல் கசிந்த போதிலும் அக்கட்டடம் இன்று வரை புனரமைக்கப்படாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான சமையலறை சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் கட்டடமொன்றில் இயங்கி வருகிறது. சேதமடைந்து தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்ட தொழிலாளர் விடுதிக் கட்டடத்திலேயே சமையலறை தற்போது இயங்கி வருகிறது.

காற்று அதிகமாக வீசும் காலங்களில் மணல், தூசு ஆகியவை சமைக்கும் உணவுகளுடன் சேரும் அபாயம் காணப்படுகிறது.

நிர்மாணிக்கப்பட்ட அனைத்துக் கட்டடப் பணிகளும்சிமெந்து, மணல் ஆகியவை தட்டுப்பாடு காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக சிமெந்து பெருமளவில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டு நிர்மாணப் பணிகளுக்கு வழங்கப்படுவதாக ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஆனால் இதுவரை இடை நிறுத்தப்பட்ட சாவகச்சேரி மருத்துவமனை நிர்மாண வேலைக்கென சிமெந்து வழங்கவும் சிமெந்தினைப் பெற்று வேலையைப் பூர்த்தி செய்விக்கவும் எவரும் முன்வராதது இவ் வைத்தியசாலை வளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்களின் அக்கறையின்மையை எடுத்துக் காட்டுகின்றது எனப் பலரும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் இவ்வைத்திய சாலை போதனா தர வைத்தியசாலையாக மாறும் என்ற ஆவலுடன் காத்திருக்கும் பிரதேச மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தையளித்துள்ளது.

எனவே இது விடயத்தில் உரியவர்கள் விரைவில் அக்கறை செலுத்த வேண்டும் என்பது மக்களது எதிர்பார்ப்பு.

**கலைநேசன்**

## வேதனையின் பாதையில் இறை உதவி

### ஞாயிறு நற்பிரசாதம்

சோதனை மேல் சோதனை போதுமடா சாமி சோதனை தான் வாழ்க்கையென்றால் தாங்காது பூமி - இந்த பாடல் வரிகள் பழைய பாடல் வரிகள் என்றாலும் எமக்கு பழக்கமானவை. எம் அனுபவத்தோடு இணைந்தவை.

வாழ்க்கையிலே சோதனைகள் வருகின்ற போது அவற்றை எதிர் கொள்ளவும் அந்த வேத னைகளில் இறைவனின் துணையோடு சாதனை படைக்கவும் முற் படவே ஒவ்வாரு மனிதனும் முயற் சிக்க வேண்டும். சோதனைகளே வேண்டாம். அவற்றை எம்மிடம் இருந்து அகற்றி விடும் என்று செபிப்பதைக் காட்டிலும் சோதனைகளை எதிர்கொள்ள அவற்றை எதிர்த்து துணிவோடு போராடி வெற்றி பெற வல்லமையைத் தாரும் என்று செபிப்பதே சிறந்தது.

வாழ்க்கையின் வேதனைகளில் யாராவது துணைநிற்க மாட்டாரா என்ற வேளைகளில் எல்லாம் இறைவனே துணைபுரி என்று வேண்டிக் கொள்ள வேண்டும் என்பதை விளக்க ஒரு கதையுண்டு.

தன் வாழ்க்கையில் எப்போதும் துன்பத்திலும், வேதனையிலும் துவண்டு போன ஒருவர் இறைவனிடம் நம்பிக்கையோடு வேண்டினார். எனது வாழ்வில் துன்பங்கள் அதிகரித்து விட்டன இன்பமான நேரங்களை விட துன்பமான நேரங்களே அதிகமாய் உள்ளன. துன்பவேளைகளில் எனக்குத்துணைபுரிய யாருமே முன்வரவில்லை. எனது வாழ்வில் துன்பங்கள் ஏற்படும் போதெல்லாம் ஆண்டவரே நீர் என் துணையாய் என் முன்னே நடந்து போம் உம்மைப் பின் தொடர்ந்து நான் வருவேன் என்று வேண்டிக் கொண்டார். அதன் பின்னரும் அவரின் வாழ்வில் இன்பமான அனுபவங்களும், துன்ப மான அனுபவங்களும் நிறைந்திருந்தன. இருப்பினும் துன்பங்கள் முன்புபோல அதிகவேதனை தருபவையாய் இல்லை என்பதை உணர்ந்து கொண்டு அவர் தன் வாழ்வின் பயணப் பாதையை திரும்பிப் பார்த்தார்.

பலவருடங்களுக்கு பிறகு வாழ்வில் தான் நடநதுவந்த பாதையைப் பார்க்கிறார். பல இடங்களில் கடவுளும் தானும் சேர்ந்து நடந்த இரண்டு சோடி பாதசுவடுகள் இருக்கின்றன. ஒரு சில இடங்களில் மட்டும் ஒரு சோடி பாதச்சுவடுகள் மட்டும் இருந்தன. அப்போது அவர் தன் வாழ்வை உற்றுநோக்கினார். மகிழ்வான வேளைகளில் எல்லாம் இரண்டு பாதச் சுவடுகள் இருப்பதைக் கண்ட அவர் தன் வாழ்வின் மிக வும் சோதனை மிகுந்த வேளை களில் ஒரு பாதச் சுவடு மட்டுமே இருப்பதைக் கண்டு மனமுடைந்து போனார். கடவுளே நீர் கூட என்னைக் கைவிட்டு விட்டீரோ துன்பமான வேளைகளில் மனிதர்கள் தான் துணைபுரியாது ஓடு வார்கள். நீர் ஏன் என்னைக் கைவிட்டீர் என்று ஏக்கத்தோடு கடவுளிடம் கேட்டார்.

கடவுள் அவரைப்பார்த்து காலடிகளைக் கணக்கிட்டு நீ பேசுகிறாய். இன்பமான நேரங்களில் நான்கு காலடிகளும் உனது துன்பமான காலங்களில் இரண்டு காலடிகளும் இருப்பது உண்மையே. இன்பமான காலங்களில் இருந்த இரண்டு காலடிகளில் ஒன்று உன்னுடையது மற்றையது என்னுடையது. ஆனால் துன்ப மான காலங்களில் இருந்த ஒரு சோடி பாதச் சுவடு உன்னுடையது தான் என்று நீ வாதிடுவது தவறு அந்த பாதச்சுவடுகள் என்னுடையவை துன்ப வேளைளில் நீ துவண்டு விடாமல் உன்னை நான் என் தோள் மேல் தாங்கிச் சென்றேன் என்று கூறினார்.

வாழ்வில் துன்பங்களும் வேதனைகளும், துயரங்களும் வாட்டுகின்ற போது மனிதர்களை [illegible] உதவிகளைத் தேடி செல்வதைக் காட்டிலும் இறைவனை நம்பி அவரே துணை செய்வார் என்று அவரை நாடிச் செல்வதே சிறந்தது. எவ்வகைத் துன்ப வேளையிலும் தம்மை நாடி வருவோரை கைவிடமாட்டாத் ஒருவர் அவரே ஆவார்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எய்ட்ஸ் தினத்தையொட்டி சுவரொட்டிப் போட்டி

சர்வதேச உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தேசிய பாலுறவு நோய் எய்ட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்ட அமைப்பினால் நடத்தப்படவுள்ள இப்போட்டியில் 15 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ள முடியும்.

இவ்வாண்டின் சர்வதேச உலக எய்ட்ஸ் தினத்தின் தொனிப்பொருள் தலைமைத்துவமாகும். இதனை பிரதிபலிக்கும் வகையில் சுவரொட்டிகள் அமைந்திருக்க வேண்டும்.

இப்போட்டிக்கான முடிவு திகதி நவ. 10 ஆம் திகதியாகும். மேலதிக விவரங்களை 0112 696433 என்னும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும். பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்தலுடன் தலைவர், தேசிய பாலுறவு நோய்/ எய்ட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம், 29, த சேரம் பிளேஸ், கொழும்பு, 10 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202-86)

## ஆசிரியர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

இணுவில் கந்தசாமி கோயில் இளந் தொண்டர் சபை நடத்தும் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் ஆலோசகரும் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி இ. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் கலந்து கொள்வார். (202-288)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 21.11.1938

உதிர்வு 30.09.2000

அமரர்

**பொ. குகதாசன்**

(பிரபல கட்டடக் கலைஞர்)

திதி: 14.10.2007

(ஞாயிற்றுக்கிழமை)

காலங்கள் ஏழு சென்றிடினும்
காலனின் மேலுள்ள கோபம் ஆறவில்லை.
என்ன வரம் கேட்போம் - உன்
துயரில் இருந்து மீள்வதற்கு

கேமாலயம், அல்வாய் தெற்கு. (66900)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

நல்லூர் வடக்கு, அருளம்பலம் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த கைலாசபிள்ளை கஜந்தன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் வீரோ அனுமதிப் பத்திரம் - இல. NP.MA 4703 கல்வியங்காட்டிற்கும் யாழ். சின்னக்கடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.




உடனடியாகப் பயணிப்பதற்கான 80 விசா அனுமதிகள் கைவசமுள்ளன

## சவுதி அரேபியாவில் தொழில் வாய்ப்பு

சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் (ஆண்கள்)

**450 - 700 றியால் வரையான சம்பளம்.**

**வெளிநாட்டுப் பிரதிநிதிகளால் நேர்முகத் தேர்வு நடாத்தப்படும்.**

**2007 ஒக்ரோபர் 22 ஆம் திகதி திங்கள் முதல் நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும்.**



தெரிவுக்குப் பின்னர் 21 நாள்களுக்குள் பயணிக்கும் வாய்ப்பு

சேவை நிபந்தனைகள்
★ மூன்றாண்டுகள் காலத்துக்கான ஒப்பந்தம்.
★ உணவு, தங்குமிடம் மற்றும் வைத்திய வசதிகள் இலவசம்.
★ நாளொன்றுக்கு 8 மணிநேர வேலை. வாரமொன்றில் 6 நாள் வேலை.
★ சேவைக்கால முடிவில் நாடு திரும்ப இலவச விமானச்சீட்டு வசதி.
★ ஏனைய சட்ட விதிகள் சவுதி அரேபிய அரசின் தொழில் சட்டங்களுக்கு அமைந்தவை.

# அகுரா

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

இல. 53, அராபி பாஷா மாவத்தை,
(மருதானை தொழில்நுட்பக் கல்லூரிச் சந்திக்கு அருகில்),
கொழும்பு - 10.
தொலைபேசி: 0115 - 375 566 / 7 / 8 / 9
தொலைநகல் - 011 - 2441339,
ஈ - மெயில் : acura@eol.lk / acura@visualnet.lk.

குருநாகல் அலுவலகம்
இல. 253, நீர்கொழும்பு வீதி, குருநாகல்,
தொலைபேசி: 037 - 2220959.

AL/613/Advt:/20/07


## நன்றி நவில்லும் கிருகயக்ஞ அழைப்பும்

### ச. கோகுலவர்ணன்



பலாலி சதாசிவஐயர் - இராசம்மா தம்பதியரினதும் காங்கேசன்துறை பத்மநாத ஐயர் - ஸ்ரீ சந்திராதேவி தம்பதியரினதும் அருமைப் பேரனும் எமது அன்புப் புதல்வனும் வர்ணதீபாவின் அன்பு அண்ணாவுமாகிய

**செல்வன் ச. கோகுலவர்ணனின்**

இறுதி நிகழ்வில் கலந்தும், தொலைபேசி, தொலைநகல், பத்திரிகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தும் ஏனைய வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (2007.10.15) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது தற்கால வதிவிடத்தில் நிகழ உள்ள கிருகயக்ஞ நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சந்திரமவுலி - ஸ்ரீலக்ஷ்மி தம்பதியினர்.**

தற்காலிக முகவரி: இந்து மகா வித்தியாலய முன் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.

நிரந்தர முகவரி: கார்த்திகேய வித்தியாலய ஒழுங்கை, வட்டுக்கோட்டை தெற்கு. (66879)


நாளை 15.10.2007 முதல் 08.11.2007 வரை

## தீபாவளி மலிவு விற்பனை

நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்

**விசேட கழிவு**

உடனே விஜயஞ்செய்யுங்கள்

**லைடன் புடைவை நிலையம்**

இல. 410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம். தொ.பே. 222 2381. (சி-53966)


## விற்பனைக்கு

24' நீளமான கடைக்குரிய அலுமினியத்திலான சுவர் அலுமாரி, அரைச் சோக்கேஸ் மற்றும் கவுண்டர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779912302.

## விற்பனைக்கு

இல.387, நாவலர் வீதியில் ஒரு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **விபுமோட்டோஸ்,**
இல.573, நாவலர் வீதி, அரியாலை [ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்பாக]
(66905) T.P.:077 9590788

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி

கீழ் குறிப்பிடப்பட்ட கட்டட வேலைகளுக்கான கேள்வி கேள்விச் சபைத் தலைவரும் வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரங்கள் 26.10.2007 ஆம் திகதி மு.ப. 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமூகமளிக்கலாம்.

| தொ.இ. | பாடசாலையின் பெயர் | வேலை விவரம் | மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணம் ரூபா | மீளளிக்கப்படும் வைப்புக் கட்டணம் ரூபா | ICTAD |
|---|---|---|---|---|---|
| 01 | யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை | திருத்த வேலை வகுப்பறைக் கட்டடம் | 250.00 | 3700.00 | M9 |
| 02 | யா/ புற்றளை மகா வித்தியாலயம் | செயற்பாட்டு அறை 40'x25' அமைத்தல் | 500.00 | 9350.00 | M9 |
| 03 | யா/ யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் | திருத்த வேலை வகுப்பறைக் கட்டடம் | 250.00 | 3200.00 | M9 |

02. மேற்படி வேலைகளுக்கான கேள்விப் பத்திரப் பணத்தை வங்கியிலிட்டு வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (Pay Order) அல்லது வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பணத்தை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை வடமராட்சி வலய பாடசாலை வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 16.10.2007 ஆம் திகதி தொடக்கம் 22.10.2007 ஆம் திகதி பி.ப. 12 மணிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. மேற்படி வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் தனித்தனிக் கடித உறையிலிடப்பட்டு உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விவரம் எழுதப்பட வேண்டும். தனித் தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரையிடப்பட்டு, வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், புலோலி, வடமராட்சி என முகவரியிட்டு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 26.10.2007 ஆம் திகதி மு.ப. 10 இற்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

04. கேள்விச் சபையால் தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட திகதியில் இருந்து ஏழு நாள்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டு உரிய காலத்தில் வேலையை பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் இவ்வேலை தொடர்பான மேலதிக விவரங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகிறேன்.

06. தகுதியான பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கேள்வி நடைமுறைக்கேற்ப பங்கு கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

வை. செல்வராசா,
கேள்விச் சபைத் தலைவரும்
வலயக்கல்விப் பணிப்பாளரும்,
வடமராட்சி.

(சி-53965)

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்ப, விவாகரத்துபெற்ற (பிள்ளைகள் இல்லை) நல்ல குணமான 51 வயது இலங்கையில் பிறந்த மணமகன் US Citizen நல்ல குணமான A- Level படித்த 43 வயது உள்ள பெண்ணை தேடுகிறார். சாதி/ மதம்/ சீதனம் பார்க்கப்படமாட்டாது. முழுவிவரங்களுடன் (ஜாதகம் இருந்தால் நல்லது) தொடர்பு கொள்ளவும்.

**Uthayan P.O.Box S. Thevarajah 57/2B, W.A. De silva Mawatha, Colombo-6. 2553922.**

## மணப்பெண்கள் தேவை

1974 Surgeon, 1975 Civil Engineer செவ்வாயற்ற கிரகபாவம் 32 உள்ளவர்களுக்கு இந்து கௌரவ குடும்பத்து படித்த வசதியான மணப்பெண்கள் தேவை.

40 வயது சுயதொழில் மணமகன்மாரும் உண்டு.


தொடர்பு: மு. செல்லையா, புன்னாலைக் கட்டுவன் தெற்கு, தொ.பே. 0776140273

## மணமகள் தேவை

கனடா குடியுரிமையுள்ள, 1974இல் பிறந்த, செவ்வாய் தோஷமுள்ள, பாவம் 34, A/L படித்த யாழ். கௌரவ குடும்ப இந்து மணமகனுக்கு A/L க்குக் குறையாத கல்வியுடன் நிரமான அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 0112367127.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவில்லும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 04 ★ 06 ★ 1924



மறைவு 14 ★ 09 ★ 2007

### அமரர் முருகர் வேலாயுதம்

அன்புடன் எம்மை அரவணைத்து
அறிவூட்டி எமை ஆளாக்கிய ஐயா!
கண்ணிலே கண்டமின்னல் மறைந்துவிடும் - எம்
எண்ணமதில் உமது முகம் நிலைத்திருக்கும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

2007.09.14 அன்று இறைபதமடைந்த எம் குடும்பத் தலைவனது மறைவுச் செய்திகேட்டு நேரில்வந்து எமது துயரில் பங்கு கொண்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவற்காடு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (சி-53971)

பொ. தெய்வேந்திரம் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் போஜோவும்

(FOJO Institute for Further Education for Journalists, Kalmar, Sweden)

இணைந்து நடத்தும்

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் வழங்கும்

## அச்சு ஊடக விருதுகள் - 2006

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் அச்சு ஊடகவியலாளர்களைக் கௌரவித்து அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவருக்குச் சிறப்புச்செய் விருதினையும் குடாநாட்டைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகவியலாளர்களுள்

* சிறந்த உசாவற் (Investigative) கட்டுரையாளர்
* நெருக்கடிச் சூழலில் சிறப்பாகச் செய்தி அறிக்கையிட்ட செய்தியாளர்
* சிறந்த விவரணக் கட்டுரையாளர்
* சிறந்த பத்திரிகைப் புகைப்படப்பிடிப்பாளர்

ஆகியோருக்கு ஆக்கத்திறன் விருதுகளையும் வழங்க விழைகிறது.

சிறப்புச்செய் விருதுக்குரியவர் நியமிக்கப்படும் குழுவினால் பரிந்துரைக்கப்படுவார். ஆக்கத்திறன் விருதுகளுக்கான முன்மொழிவுகளை மேற்படி மையம் ஊடகவியலாளர்களிடம் கோருகின்றது.

முன்மொழிவுக்கான விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய விவரங்களையும் **இயக்குநர், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம், 84, ஜும்மா மசூதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். போதிய முத்திரை ஒட்டிய சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையை அனுப்பி தபால் மூலமும் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். படிவத்தின் போட்டோப் பிரதியையும் பயன்படுத்தலாம்.


விண்ணப்ப இறுதித் தினம்: 15.11.2007

(சி/53964)) -பதிவாளர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 14 . 08 . 1991

முருகனின் பாதத்தில் 31 . 08 . 2007



கடந்த 31.08.2007 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் நடராசலிங்கம் கோமளன் (மயூரன்)

(புடைவைக்கடை உரிமையாளர், சாவகச்சேரி)

பூவுலகில் என்னைப் படைத்த கடவுளே!
இப்புவி மீது நான் உந்தனுக்கு பாரமா?
உன்பணி என்றவுடன் சிரம் தாழ்த்திச் செய்வேனே,
என்பணி தன்னில் குற்றமா? ஏது கண்டீர்?

என் குடும்பம் சிறந்திடவே உன்னடி பணிந்து நான்
சந்நிதி வீதியிலே காவடியாய் பறந்தேனே
முள்ளுகள் தைத்த தழும்புகள் தான் மாறவில்லை
அதற்கிடையில் என்னுயிரை ஏன் இறைவா பறக்க வைத்தாய்?

தானம் கொடுப்பது தரணியில் உயர் பணியென
அன்னத்தைத் தானமாய் அறப்பணி புரிய எண்ணி
அதிகாலை துயிலெழுந்து அரிசி மூட்டை தலைச் சுமந்து
ஆவலுடன் வந்த என்னை அவசரமாய் கொன்றதேனோ?

பள்ளிசெல்லும் பிள்ளைமுகம் பாதியிலே மறக்க வைத்தாய்
பாசமான மனையாளின் குங்குமத்தை அழித்து விட்டாய்
பரிதவித்து நிற்கின்ற என் குடும்பத்தை அழித்து விட்டாய்
பழி வேண்டி என்ன பயன் இறைவா நீ கண்டுவிட்டாய்

உன் கடனை ஓடி வந்து உடனே முடித்து விட்டாய்
என் கடமை முடியவில்லை ஓயவும் முடியவில்லை
என் குடும்பம் சிறந்திடவே ஆதரிப்பார் யாரோ?
ஆத்மாவின் குரலாய் உன்னை நான் கேட்கிறேன்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி: எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்.

தற்காலிக முகவரி: கமலாசினி வீதி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

உம் பிரிவால் தவிக்கின்ற; சி.நடராசலிங்கம் (அப்பா), ...

## திறமையானவர்களுக்கு மட்டும்

செலிங்கோ லைஃப் இலங்கையின் பெரியதும் வெற்றிகரமானதுமான நிறுவனமாகும். இது பல வர்த்தகக் குறிகளைக் கொண்டுள்ளதுடன் புதிய கண்டுபிடிப்புகள், திட்டங்களின் அறிமுகம், வாடிக்கையாளர் நலன் மற்றும் தொழில்சார் கல்வி அபிவிருத்தி என்பவற்றில் உள்ளூர் காப்புறுதித் துறையில் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. சிறந்த கூட்டுத்தாபன பிரஜை மற்றும் வர்த்தகக் குறி நன்மதிப்பு என்பவற்றில் உள்ளூர் மற்றும் சர்வ தேச விருதுகளை வென்றுள்ளது. கிளைவலையமைப்பு மற்றும் கட்டுப்பண வருமானம் என்பவற்றில் இலங்கையின் சந்தை முன்னோடியாகவும் திகழ்கின்றது.

### Trainee Branch Operations Officer
**Underwriting (Administration)**
**Jaffna Branch**

இளம், செயற்றிறன் மிக்க, கற்பதில் ஆர்வமுடைய மற்றும் காப்புறுதித்துறையில் நிபுணத்துவம் பெற விரும்பும் ஒருவரே தகைமையுடைய விண்ணப்பதாரியாவார்.

கிளை இயங்கும் குழாமில் ஓர் அங்கத்தவர் என்றவகையில் காப்புறுதி ஒப்பந்தங்களை சேவை செய்தல், ஏற்றுக்கொள்ளல், கோரிக்கைகளை கையாளுதல் மற்றும் நிதியியல் என்பவற்றைக் கற்க எதிர்பார்க்கப்படுகின்றார். நீங்கள் க.பொ.த. சாதாரணம் மற்றும் உயர்தரம் (உயிரியல் விஞ்ஞானம், வர்த்தகம்) என்பவற்றில் நல்ல பெறுபேறுகளைக் கொண்டவராக இருக்கவேண்டும். ஆங்கிலம் / தமிழ் மற்றும் சிங்களத்தில் தேர்ச்சியுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். போதியளவு கணனியறிவும் அவசியமானது.

விண்ணப்பதாரர் 25 வயதிற்குட்பட்டவராகவும் மேலே குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிப்பவராகவும் இருக்கவேண்டும். பொருத்தமான விண்ணப்பதாரருக்கு கவர்ச்சிகரமான சம்பளப் பொதி வழங்கப்படும்.

உங்களது விண்ணப்பங்களை, தொடர்புகொள்ளும் விவரம் மற்றும் இரண்டு உறவினரல்லாத நடுவர்களின் விவரங்களுடன் jobs@ceylife.lk எனும் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது தபால் மூலமாயின் கீழுள்ள முகவரிக்கு 07 நாள்களுக்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். அஞ்சலுறையின் இடது பக்க மேல்மூலையில் பதவி வெற்றிடத்தையும் கிளையையும் தவறாது குறிப்பிடவும். எல்லா விண்ணப்பங்களும் இரகசியமான முறையில் பேணப்படும்.

"செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி சம சந்தர்ப்பம் அளிக்கும் ஒரு வேலைகொள்பவர்"

முகாமையாளர்,
**செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**
இல.560, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**மின்னஞ்சல்:** jobs@ceylife.lk

(சி/52736)

பெரியதோ சிறியதோ எதையும் காப்பது செலிங்கோ



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 25 ★ 10 ★ 1929



மறைவு 25 ★ 09 ★ 2006

## திருமதி கனகரத்தினம் கனகம்மா

(புங்குடுதீவு)

14.10.2007

அம்மாவைப் போலொரு தெய்வமும் இல்லை
அவரின் கடன் தீர்க்க எத்தனை பிறப்பு எடுத்தாலும்
பிறந்தாலும் தீர்க்க முடியாது
எங்கள் அம்மாக் குஞ்சின் ஆத்மா சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கனகம்மா அகம்,
ராஜ வீதி,
...காடு.
(சி/53954)

தகவல்:
**தேவி** (கொழும்பு),
**ரேவதி - வலன்ரின்** (சுவிஸ்),
**செல்வன்- ராகினி** (லண்டன்),
**ரதி-சுசன்** (யாழ்ப்பாணம்), **பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
## வருடாந்த பரிசளிப்பும்
## யூனியன்ஸ் சிறப்பு மலர் வெளியீடும் - 2007

இடம்: யூனியன் கல்லூரி மண்டபம்
காலம்: 15.10.2007 திங்கட்கிழமை காலை 9.30 மணி
தலைவர்: திரு.சு.புண்ணியசீலன் (கல்லூரி அதிபர்)
பிரதம விருந்தினர்: உயர்திரு. க.கணேஷ் அவர்கள் (அரச அதிபரும் மாவட்டச் செயலரும், யாழ்.மாவட்டம்)
சிறப்பு விருந்தினர்கள்: செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள் (ஓய்வுபெற்ற வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர்)
திருவாளர் ச.கைலாசநாதன் அவர்கள் (உதவிக்கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
பரிசில் வழங்குபவர்: திருமதி பரமேஸ்வரி கணேஷ் அவர்கள்

இவ்வருட பரிசுத் தினத்திலே,
* தொடர்ச்சியாக எட்டு வருடங்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் வலிகாமம் கல்வி வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்று வருகின்றமை, அத்தோடு 2006இல் மாவட்டத்தில் 4ஆம் இடம் பெற்றமை
* 2006இல் பல்கலைக்கழகத்திற்கு 20 பேர் தெரிவுசெய்யப்பட்டமை

மேலும்
* மாவட்ட மட்டத்தில் 16 முதலிடங்களை மெய்வல்லுநர் போட்டிகளில் பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றியமை
* 15, 17 வயதுப்பிரிவு வலைப்பந்தாட்ட அணியும் 19 வயதுப் பிரிவு மேசைப் பந்தாட்ட அணியும் முதலிடம் பெற்று தேசியமட்டத்தில் பங்குபற்றியமை
* இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்திய 15 வயதுப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியமை
* தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் வில்லுப்பாட்டில் தங்கப் பதக்கம் பெற்றமை

போன்ற சாதனைகளை நிலைநாட்டுவதற்கு அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் பரிசுகள் பெறும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பழைய மாணவர் சங்கம்,
(66912) யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 09.12.1937
மறைவு 14.09.2007

காரைநகர், களபூமி, பாலாவோடையைப் பூர்வீகமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட
### அமரர் குருநாதர் கோபாலபிள்ளை
(அவை கோபாலபிள்ளை)

14.09.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உதவிகள் பல புரிந்த அனைத்து நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (66904) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீருபினி ரட்ணாகரன் (ருபி)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீரூபினி ரட்ணாகரன் 10.10.2007 புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்வராணி தம்பதியரின் புதல்வியும் கனடாவில் வசிக்கும் யோகநாதன் - சித்ரா தம்பதியரின் மருமகளும் ரட்ணாகரனின் பாசமிகு மனைவியும் அஞ்சலி, ராகவி ஆகியோரின் பாசமிகு தாயும் ஸ்ரீகுமார் (கனடா), ஸ்ரீரஜனி (கனடா), ஸ்ரீராகினி (ஜேர்மனி), ஸ்ரீரமணி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீரஞ்சன் (கனடா); ஸ்ரீரோகினி (ஆஸ்திரேலியா), ஸ்ரீரவிசங்கர் (கனடா), ஸ்ரீரமேஷ் (கனடா), ஸ்ரீசுரேஸ் (கனடா) ஆகியோரின் அருமைத் தங்கையும் ஞானசக்தி (கனடா), சிவமூர்த்தி (கனடா), ஸ்ரீரங்கநாதன் (ஜேர்மனி), அருள்வேல் (யாழ்.பல்கலைக்கழகம்), மலர்ச்செல்வி (கனடா), ராஜேந்திரம் (ஆஸ்திரேலியா), ஜெயபாலினி (கனடா), ரஜனி (கனடா), கலைவாணி (கனடா), சியாமளா (கொழும்பு), பொகிந்திரா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2007) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (66918) **ஸ்ரீரமணி அருள்வேல்** (சகோதரி).

## தாச்சிச் சுற்றுப்போட்டி

வலி.வடக்கு,ஒக்.14

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம், யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மானிப்பாய் சுதுமலை மேற்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் விலகல் முறையிலான போட்டிகளில் 20 கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

சனி, ஞாயிறு மற்றும் போயா நாள்களில் மட்டும் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (202-86)

## வாடகைக்கு

இல.16, கஸ்தூரியார் ஒழுங்கையில் அடிப்படை வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு நேரம்: காலை 6.30 - 8.00
மாலை 4.30 -6.00 மணிவரை (67708)

## வீடு வாடகைக்கு

கொழும்பு- 5, அன்ரசன் தொடர்மாடி, (Near Apollo Hospital) 2ஆம் மாடியில் 02 அறைகள் கொண்ட வீடு fully furnished (சகல தளபாடங்களுடன்) ஒரு/ இரண்டு வருடங்களுக்கு வாடகைக்கு உண்டு. (சி/53979)

விவரங்களுக்கு: 0716850001

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கும் A-9 வீதிக்கும் அண்மையில் 3 ½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: திரு. செ.சபாரத்தினம்,
பெரியரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
தொ.பே.: 0776913052. (66922)

## காணி விற்பனைக்கு

சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்துக்கருகாமையிலும் பழைய வேதக் கோயிலடிக்கருகாமையிலும் மூன்று துண்டுக் காணிகள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021-2222444
மாலை 7 மணிக்குப் பின்பு: 021-2223818 (66915)

## தவறிவிட்டது

V.H லேன், இருபாலை, கோப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த நல்லம்மா வேலாயுதம் என்பவரின் தேசிய அ.அட்டை (496252373V), விசேட அ.அட்டை (0903009945) இராணுவத்தால் வழங்கப்படும் அடையாள அட்டைக்கான பற்றுச்சீட்டு என்பன 10.10.2007 அன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (66913)

## மணப்பெண்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், லண்டன், 1976, பூராடம் 20 கிரகபாவம், 5'6" உயரம், நோர்வே, 1970 கார்த்திகை 16 கிரகபாவம் 5'4" உயரம், சுவிஸ்லாந்து, 1968 திருவாதிரை, 8இல் சூரியன் செவ்வாய் 43½ பாவம், 5'4" உயரம் ஆஸ்திரேலியா, 1978 கார்த்திகை, 49½கிரகபாவம், 5'7" உயரம் குடியுரிமையுடைய G.C.E O/L படித்த, தனியார் கம்பனிகளில் பணிபுரியும் மணமகன்களுக்கு படித்த, அழகான மணப்பெண்கள் தேவை. தரமான புகைப்படங்களுடன் தொடர்புகொள்ளவும். விவரங்களுக்கு:
திரு.S.K.சிவாகரன், சிவாலயா சர்வதேச திருமண நிலையம்,
389C, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு.
தகவல் மையம்: ஸ்ரேசன் வீதி [திவ்யா பேக்கரி அருகில்], சுன்னாகம்.
T.P.: 0775834982 (66916)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சின்னத்துரை



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட ச.சின்னத்துரை அவர்கள் 09.10.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சரவணமுத்து-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர் சுப்பையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் குகதர்சினி (பணியாளர் - சாந்தியகம்), ஜெகதர்சினி (மஸ்கன் பாம் மேற்பார்வையாளர், நுவரெலியா), வசந்ததாசன் (மாணவன், A/L 2007 வர்த்தகம், யாழ்.இந்துக்கல்லூரி) ஆகியோரின் தந்தையும் சறோஜா, அமரர் காசிப்பிள்ளை உதயன் (டென்மார்க்), திலகவதி, பத்மாவதி ஆகியோரின் சகோதரரும் அமரர் தில்லைநாதன், மகேந்திரம், கணேசன் (டேகா), அமரர் கலாவதி, பத்மாவதி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் விமல், சர்மிலி, சுகன்யா, சுரேஸ், ரமேஸ் ஆகியோரின் மாமனும் டெனிஸ், மதுரா, மீரா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[illegible] வீதி,
ஆனைக்கோட்டை. (66895) **குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை 2007 இல் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவி*

**செல்வி சிவராஜா துவாரகா**

*அவர்கள் கல்வியில் மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.*

*வாழ்த்துவோர்:*
அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா S.தங்கராஜா குடும்பம்,
*சித்தப்பாமார்:* S.அம்பிகைராஜா குடும்பம், S.ஜெயராசா குடும்பம்,
S.பரிச்சந்திரன் குடும்பம், *மாமாமார்:* M.பாஸ்கரசிங்கம் குடும்பம்,
V.கணேசவேல் குடும்பம், R.ராஜன் குடும்பம்.
*அன்னை இல்லம், உரும்பிராய் வடக்கு.* (66516)

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரம் செல்வராசா



[ஓய்வுபெற்ற சிமேந்துக் கூட்டுத்தாபன பாதுகாப்பு ஊழியர்]

காங்கேசன்துறை, காட்டடைப்பு வீதியைப் பிறப்பிடமாகவும் மருதனார்மடம், புகையிரத நிலைய நலன்புரி முகாம், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரம் செல்வராசா அவர்கள் 11.10.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் பெரியார் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் (தங்கா) பாசமிகு கணவரும் பிரபாரகன் (பிரபா - கொழும்பு), சங்கீதா, மீனாராணி (மீனா - இந்துக்கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரனின் மாமனும் சரஸ்வதி (கிளி), கலா, சுமதி, காலஞ்சென்ற மதிவதனி மற்றும் லோகநாதன் (லோகன்-கனடா), முருகேசு, காலஞ்சென்ற கருணானந்தசிவம் மற்றும் தம்பி, சிவகுருநாதன் (பூலோகம்), நவநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் பூவாலோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மருதனார்மடம்.* (66909) **மனைவி.**

### சின்னையா சத்தியமூர்த்தி



*(முன்னாள் சிங்கர் கம்பனி முகாமையாளர், பளை)*

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சத்தியமூர்த்தி நேற்று (13.10.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-இராசம்மா தம்பதியரின் மருமகனும் அம்பிகையின் அன்புக் கணவரும் சாரதா (கனடா), ருக்மணி, நவமணி (அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு), நடராசமூர்த்தி (ஆனந்தன் - பிரான்ஸ்), சத்தியதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் தியாகராசா (ஆசிரியர்), அமரர் சோதிநாதன் (வீரகேசரி), கனகநாயகம் (கொழும்பு), தயாபரசிவம் (ஓய்வூதியர்), அன்னரத்தினம், வைகுந்தவாசன் (கொழும்பு), திலகவதியார் (கிராம அலுவலர்), வள்ளுவதாசன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுந்தரன் (கனடா), துரைராசா, திருமகள் (பிரான்ஸ்), சிவரஞ்சன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் துசான், றொசான், வனஜா, அம்சா, ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (66920) **மனைவி, மக்கள், மருமக்கள்.**

### தேவதாஸ் மீனாகுமாரி



யாழ்/வண்ணை பேச்சியம் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, குருமன்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாஸ் மீனாகுமாரி 12.10.2007 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான நல்லையா - நல்லம்மா தம்பதியரின் மருமகளும் தேவதாஸின் (பிரான்ஸ்) மனைவியும் லக்ஸ்மன் (பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்), சுரேன் (டோகா), சுரேகா (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும் துரைராசா, பரதன், சந்திரகுமாரி, கோகிலா, காஞ்சனா, அமரர் கர்ணன், ஜெயக்குமாரி ஆகியோரின் சகோதரரும் ராசா, கலா, நடேசு, கனகராசா, பத்மநாதன், இந்திரா, ஆனந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வவுனியா தச்சனங்குளம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நாவலடி லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (66921) **ஆனந்தன்** *(மைத்துனர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# அதி அவசரம்தான் ஏனோ?

வடக்கில் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை நடத்துவதற்கென நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விசேட சட்ட மூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 33 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்காக இந்த விசேட சட்டமூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது, உயர் நீதிமன்றத்தின் கருத்தைப்பெறுவதற்காக சபாநாயகர் அதனை அங்கு அனுப்பி வைத்திருந்தார்.

குறிப்பிட்ட திருத்தச் சட்ட மூலம் - விசேட ஏற்பாடுகள் - அரசமைப்புக்கு முரணானவை அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அதாவது உள்ளூராட்சி அதிகாரசபையின் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் இனி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கலாம்.

வடக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான வேட்பு மனுக்கள் பல தடவைகள் கோரப்பட்டு பின்னர் ரத்துச்செய்யப்பட்டன. அதாவது காலத்துக்கு காலம் ஒத்தி வைக்கப்பட்டன. ஆகப் பிந்தியதாக அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதிக்கு இத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பின்னணியில் அடுத்த வருட முற்பகுதியில் எப்படியாவது வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்தவேண்டும் என்று அரசாங்கம் அவசரப்படுகிறது. அதற்காகவே மேலே குறிப்பிட்ட உள்ளூராட்சி அதிகார சபை விசேட ஏற்பாட்டு சட்டத்தை நிறைவேற்ற அளவுக்கு மீறிய வேகத்தில் செயற்படுகிறது; அதி அவசரப்படுகிறது.

ஆனால் -

வடக்கு மாகாணத்தில் அடுத்த வருடத்திலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியுமா என்ற பாதக நிலையே இப்போதும் தென்படுகிறது. தீவிர போர்ச் சூழ்நிலை ஒன்று முகிழ்த்து, மக்கள் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள முடியாத இக்கட்டான காலமாகவே அடுத்த வருடம் அமையும் என்று இப்போதே மக்களால் உணரப்படுகிறது.

இந்த நெருக்கடியான, இக்கட்டான சூழ்நிலை அடுத்த வருட ஆரம்பத்தில் மாறி சுமுக நிலை உருவாகும் என்ற சூழ்நிலை எதுவும் இப்போது சற்றும் தென்படவில்லை; மிகத் தூரத்திலும் தெரியவில்லை!

வடக்கில் தேர்தல்களை நடத்தினால் சுமுக நிலை இருப்பதாக வெளியுலகத்துக்குக் காட்ட இயலும் என்ற எண்ணத்துடன் அரசு இது விடயத்தில் தீவிரம் காட்டலாம். ஆனால் அத்தகைய தேர்தல் மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளும், வேண்டாத வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் உட்படுத்தும்.

தமிழ் மக்களிடையே உள்வீட்டுமோதல்களை உருவாக்கி, வேண்டாத விளைவுகளை கொண்டு வந்து நிலைமையை மேலும் சீர்கொட்டு மோசமடையச் செய்யும்.

வடக்கில் ஜனநாயகமும் நிலவுகிறது என்று காண்பிக்கவேண்டும் என நினைத்தால், விரும்பினால் சுதந்திரமான தேர்தலை நடத்தக் கூடிய புறச்சூழ் நிலையை உருவாக்க வேண்டும் அதற்கான உள்ளார்ந்த விருப்பமும் நோக்கமும் அரசிடம் இருந்தால் மட்டுமே அது சாத்தியம்.

உள்ளூராட்சி சபைத்தேர்தலை நடத்துவதில் உள்ள அவசரத்தை, அதிவேகத்தை மக்கள் இழந்து நிற்கும் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிப்பதிலும், சுதந்திரமான தேர்தலை நடத்தக் கூடிய புறச்சூழ் நிலையை உருவாக்குவதிலும் அரசு மனதார விரும்பி அதனை செயல் வடிவமாக மாற்றுமாயின் மிகவும் நல்லதே!

# தமிழ் மக்களின் எதிர்காலத்தை அருத்துவரும் சமர்கள் தீர்மானிக்கும்

## சமாதானப் பேச்சுக்கு வாய்ப்பில்லை என்கிறார் புலித்தேவன்

கிளிநொச்சி,ஒக்.14

இனிவரப் போகும் காலமே எமக்குச் சாத்தியமான காலம். இக்காலகட்டத்தில் நடைபெறும் சமரே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் சமராக அமையப் போகின்றது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற 2ஆம் லெப்.மாலதியின் 20 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமது இராணுவம் நூறுவிழுக்காடு வெற்றிக்களிப்பில் உள்ளதெனவும் இனி மிகுதிப் பகுதிகளையும் கைப்பற்றுவதே தமது கடமையெனவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இவற்றுக்கெல்லாம் சரியான பதில்கள் உள்ளன.

ஏனெனில் இனிவரப் போகும் காலமே எமக்குச் சாத்தியமான காலம். இந்தக் காலத்தை நாங்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். எனவே இனி வரும் காலத்தில் கடும் சமர் மூளப் போகின்றது. இனி சமாதானப் பேச்சுக்கள் நடைபெற வாய்ப்பில்லை.

அனைத்துக் கள முனைகளிலும் எதிரி கடும் சமர்களை ஆரம்பிக்கத் தயாராகி விட்ட நிலையில் அதற்கான பதிலடிகளை வழங்க நாமும் தயாராகவே உள்ளோம்.

அண்மைக் காலமாக மன்னார் பகுதியில் கடும் தாக்குதல்களை நடத்தினோம் இதன் மூலம் எதிரியின் உடல்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளோம். இவ்வாறுதான் இனி நடக்கப்போகும் சமர்கள் கடும் உக்கிரமானவையாக இருக்கும். மஹிந்த அரசு தொட்டம் தொட்டமாக இருந்த நிலப் பகுதிகளை ஆக்கிரமித்துவிட்டு அதைப் பெரும் வெற்றியாகக் காட்டிக்கொண்டு சிங்கள மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றித் தனது அரசியலை நடத்தி வருகின்றது.

### இனிவரப்போவதுதான் நிஜமான சமர்கள்

இனிவரப் போவதுதான் நிஜமான சமர்க்களங்கள். இச்சமர்கள் எவ்வாறு இருக்கப்போகின்றன என்பவை இனித்தான் முக்கியமானவையாக அமையும். வரப்போகும் நவம்பர் மாதம் என்பது ஒரு முக்கியமான காலம். தமிழீழத் தேசியத் தலைவர் மாவீரர் தின உரையை நிகழ்த்தவுள்ளார்.

அடுத்து சிறிலங்காவில் வரவு செலவுத் திட்டத்தை மகிந்தராஜபக்ஷ கொண்டு வரப்போகின்றார். வரவு - செலவுத் திட்டம் வெற்றியளிக்க வேண்டுமெனில் ஜே.வி.பி., புத்த பிக்குகள் அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும். ஆதரவளிப்பதாயின் சண்டையை ஆரம்பிக்குமாறு அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே அடுத்து வரும் காலத்தில் மிகப் பெரும் சமர்க்களங்கள் இங்குதான் நடைபெறப் போகின்றன. நாங்கள் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையிலிருந்து தற்பாதுகாப்பு யுத்தத்திலேயே ஈடுபட்டோம்.

கிழக்கிலிருந்த எமது போராளிகளும் தளபதிகளும் வந்துசேர்ந்து விட்டார்கள். அவர்கள் அதிகரித்துள்ள எமது படையணிகளை வழிநடத்தி வருகின்றனர். எனவே இனிவரும் சமர் சிறிய சமர்களாக அமையப் போவதில்லை.

இனிக்கடும் சமர்களே நடைபெறப் போகின்றன. இதில்தான் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படப் போகிறது. எனவே நாம் ஓர் இறுக்கமான முடிவை எடுத்துள்ளோம். அதாவது வன்னி நிலப்பரப்பினுள் சிங்கள இராணுவம் காலடி எடுத்துவைப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அந்த நோக்குடனும் இலக்குடனுமே நாங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றோம். எனவே எமது மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற சமராக அடுத்துவரப் போகும் சமரே அமையவுள்ளது.

### சண்டை நடைபெற்றே தீரும்

உலகின் பலநாடுகளில் இவ்வாறு யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ரஷ்யாவில் போர் நடைபெறும்போது வயது முதிர்ந்தவர்களும் குழந்தைகளும் மட்டுமே வீடுகளில் இருந்தனர். ஏனையோர் அனைவரும் களமுனைகளில் நின்றனர். ஆண், பெண் என்ற பேதமின்றி சகலரும் போர் முனைக்கே சென்றனர். இவ்வாறான ஒரு காலம் நிச்சயமாக எமது பகுதியிலும் உருவாகும்.

அப்போது நிச்சயமாக அனைவரும் போராடியே ஆகவேண்டும். இங்கு நூற்றுக்கணக்கில் விமானங்கள் குண்டுகளை வீசினாலும் இராணுவம் அனைத்துப் பகுதிகளிலும் முன்னேறினாலும் சண்டை நடைபெற்றே தீரும். எனவே மக்கள் அவற்றை எதிர்கொள்ளத்தயாராக இருக்க வேண்டும் என்றார். (50)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.14

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் நவராத்திரிக் கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு செஞ் சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஆசியுரை நிகழ்த்துவார். பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் கே. உமா பதியும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.கே. அருள்வேலும் கலந்து சிறப்பிப்பர். (202)

* * *

நல்லூர்,ஒக்.14

கீதவாஹினி இசைக் கல்லூரியின் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடை பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக எஸ்.ரீ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக மதுரகவி காரை எம்.பி.அருளானந்தமும் கலந்துகொள்வர். (203-111)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.14

மூளாய், மாவடி வீதி புனித செபமாலை மாதா ஆலய வருடாந்த திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலி இடம்பெற்று திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (203)

* * *

நல்லூர்,ஒக்.14

யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் 'பொஸ்கோ கிட்ஸ்' நிகழ்வுகள் இன்று ஞாயிற்று 10 மணிக்கு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். சிறுவர் நன்நடத்தை அலுவலர் கனகாம்பிகை சிவராஜாவும், சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.குகதாசனும், கௌரவ விருந்தினராக அருட்பணி ஜே.பி.அன்ரனிதாஸும் கலந்து கொள்வர். (203-111)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நூலக விழிப்புணர்வு நிறுவகத்தினால் நடத்தப்படவிருந்த போட்டிகள் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. போட்டிகள் இன்றும் நடைபெறும்.

பேச்சுப் போட்டிகள் நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றன. கட்டுரை மற்றும் பொது அறிவுப் போட்டிகள் இன்று மூன்று நிலையங்களில் நடத்தப் படவுள்ளன.

தைதடி முத்துக்குமாரசுவாமி.ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி ஆகிய நிலையங்களில் போட்டிகள் நடத்தப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

## நாளை

புரட்டாதி - 28 : திங்கட்கிழமை 15.10.2007
திதி : சதுர்த்தி மாலை 06.04
நட்சத்திரம் : அனுஷம் முன்னிரவு 08.21
சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02

# வேலணைப் பிரதேசசபை கட்ட வேலை பூர்த்தி

யாழ்ப்பாணம் ஒக். 14

வேலணை பிரதேச சபை தலைமை அலுவலக கட்டடப் பணிகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

அதனைத் தொடர்ந்து விரைவில் கட்டடத்தை திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு - கிழக்கு அவசரகால புனரமைப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் (NEERP) மேற்படி புதிய கட்டடம் புனரமைக்கப்பட்டுள்ளது. (அ-95)

# இடம்பெயர்ந்த, நலிவுற்ற குடும்பங்களுக்கான நிவாரணப் பொருள்களின் விநியோக விவரம்

யாழ்ப்பாணம், ஒக்.14

இடம்பெயர்ந்த, நலிவுற்ற குடும்பங்களுக்கு ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்கள் நாளை திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளன.

வழங்கப்படவுள்ள பொருள்களின் விலைவிவரங்கள் யாழ்.செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

சம்பா அரிசி 36ரூபா 50 சதத்திற்கும் கோதுமை மா 58 ரூபாவிற்கும் சீனி 53 ரூபாவிற்கும் பருப்பு 98 ரூபாவிற்கும் வழங்கப்படவுள்ளன.

அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களின் நிவாரணப் பணப் பெறுமதிக்கேற்ப பொருள்கள் விநியோகம் செய்யப்படும்.

நிவாரண விநியோக அட்டவணைகளின் விவரம் வருமாறு:-

**நிவாரண விநியோக அட்டவணை - ஓகஸ்ட் - 2007**

| பொருள் | விலை | ஒரு அங்கத்தவர் கி.கி | இரண்டு அங்கத்தவர் கி.கி | மூன்று அங்கத்தவர் கி.கி | நான்கு அங்கத்தவர் கி.கி | ஐந்து அங்கத்தவருக்கு மேல் கி.கி |
|---|---|---|---|---|---|---|
| சம்பா அரிசி | 36.50 | 5.350 கி.கி. | 10.175 கி.கி. | 14.000 கி.கி. | 14.925 கி.கி. | 19.075 கி.கி. |
| கோதுமைமா | 58.00 | 1.000 கி.கி. | 2.000 கி.கி. | 3.000 கி.கி. | 4.000 கி.கி. | 5.000 கி.கி. |
| சீனி | 53.00 | 1.000 கி.கி. | 1.500 கி.கி. | 2.000 கி.கி. | 2.500 கி.கி. | 2.750 கி.கி. |
| பருப்பு | 98.00 | 0.300 கி.கி. | 0.500 கி.கி. | 0.500 கி.கி. | 1.000 கி.கி. | 1.300 கி.கி. |
| | | 336.00 ரூ. | 616.00 ரூ. | 840.00 ரூ. | 1,008.00 ரூ. | 1,260.00 ரூ. |

**நிவாரண விநியோக அட்டவணை - செப்ரெம்பர் - 2007**

| பொருள் | விலை | ஒரு அங்கத்தவர் கி.கி. | இரண்டு அங்கத்தவர் கி.கி. | மூன்று அங்கத்தவர் கி.கி | நான்கு அங்கத்தவர் கி.கி | ஐந்து அங்கத்தவருக்கு மேல் கி.கி |
|---|---|---|---|---|---|---|
| சம்பா அரிசி | 36.50 | 4.550 கி.கி. | 9.375 கி.கி. | 13.200 கி.கி. | 14.150 கி.கி. | 18.275 கி.கி. |
| கோதுமைமா | 58.00 | 1.500 கி.கி. | 2.500 கி.கி. | 3.500 கி.கி. | 4.500 கி.கி. | 5.500 கி.கி. |
| சீனி | 53.00 | 1.000 கி.கி. | 1.500 கி.கி. | 2.000 கி.கி. | 2.500 கி.கி. | 2.750 கி.கி. |
| பருப்பு | 98.00 | 0.300 கி.கி. | 0.500 கி.கி. | 0.500 கி.கி. | 1.000 கி.கி. | 1.300 கி.கி. |
| | | 336.00ரூ. | 616.00 ரூ. | 840.00 ரூ. | 1,008.00 ரூ. | 1,260.00 ரூ. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை மீறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருந்தத்தக்கவையாகவும் இருக்கின்றன.

இங்கு பெரும் எண்ணிக்கையான கொலைகள், கடத்தல், காணாமற்போதல் சம்பவங்கள் இன்னும் விசாரணை செய்யப்படாமல் இருந்து வருகின்றன இது மிகவும் வேதனைக்குரிய, ஜீரணிக்கவே முடியாத ஒரு விடயமாகும்.

கிளிநொச்சி சென்று விடுதலைப் புலி களின் பிரதிநிதிகளிடம் அவர்களினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமைச் செயற்பாடுகள் குறித்து சர்வதேச சமூகத்தின் அதிருப்தியை நேரடியாகத் தெரிவிக்க முடியாமல் போனது எனக்கு மிகவும் கவலையளிக்கிறது.

நேரமின்மை காரணமாக கிழக்குக்குச் செல்ல முடியவில்லை. இதுவும் ஒரு துரதிர்ஷ்டம். விடுதலைப் புலிகள் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டுவருவதாக கூறப்படும் மனித உரிமை மீறல் குறித்தும் எனக்குத் தமிழ்மக்களிடம் இருந்தும் அறிக்கைகள் கிடைத்துள்ளன.

**அரச கட்டமைப்புகள் மீது மக்களுக்கு நம்பிக்கையின்மை**

மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிப்பதற்கு பல விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத் தரப்பில் கூறப்பட்ட போதிலும், பல்வேறு தரப்பினரும் இந்தக் கட்டமைப்புகள் மீதும் அவற்றின் செயல்திறன் மீதும் நம்பிக்கையின்மையே வெளிப்படுத்துகின்றனர்.

**முடிவுக்கு வரும் என்று எப்படி நம்புவது?**

நீதி விசாரணைக் குழுக்கள், நீதியான வழக்குகள் மற்றும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுதல் போன்ற எதுவுமே இல்லாத ஒரு சந்தர்ப்பத்தில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் முடிவுக்கு வரும் என்று எப்படி நம்ப முடியும்?

ஒட்டுமொத்தத்தில் என்னைப் பொறுத்த வரையில் விசாரணைக் கமிஷன் போன்ற குழுக்களால் இத்தகைய உரிமை மீறல்களைத் தடுக்கமுடியாது. ஐ.நா வின் மனித உரிமைக் கண்காணிப்பகம் போன்ற ஏதேனும் சர்வதேச அமைப்புகளின் பிரசன்னமே இங்குள்ள மனித உரிமை மீறல் சம்பவங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் என்று தெரிவித்தார். (அ-த)


**DIPLOMA IN MOBILE PHONE REPAIRING**

(சகல வகையான கையடக்கத் தொலைபேசி களையும் 100% நீங்களே திருத்துவதற்கான தொழில் சார் கற்கைநெறி)

சுயதொழில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற 100% செயல்முறைப் பயிற்சி அடங்கிய கற்கைநெறி.

**SOFTWARE & HARDWARE REPAIRING**

- Spares அறிமுகமும் அதன் தவறுகளும்
- IC க்களின் அறிமுகமும் அதில் ஏற்படும் தவறுகளும்
- Hot air gun / Soldering என்பவற்றின் உபயோகம்
- பலவிதமான Mobile Phone களையும், குறிப்பாக Ribbon Type Phone களை கழற்றும் முறை Ribbon மாற்றுதல் / Ribbon ஒட்டுதல் போன்ற பயிற்சி
- தவறுகளை கண்டுபிடிக்க Troubleshooting (i, ii, iii) ஒழுங்கு முறைகள்
- Mobile Lock உடைத்தல், Flashing செய்தல்
- Bluetooth / Infrared என்பவற்றின் உபயோகம். Etc...

**By :- S.Selvathashan**

(18.10.2007 அன்று 11.30 வகுப்புக்கள் ஆரம்பம்)

மேலதிக விபரங்களுக்கு :-
**UNI ICT Education Trainers Manipay**
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)



**தீபாவளியை முன்னிட்டு**
மீண்டும் எமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள்

FedEx Express

லண்டன் அனுப்பப்படும் 5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில் விசேட சலுகை

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருள்கள் உணவுப் பொருள்கள் உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்சப்படும்

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கினேன். அதற்கு அவர் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார் என்று ஜனாதிபதி கூறினார்.

**இந்தியாவின் தார்மீக ஆதரவு எப்போதும் எமக்கு உண்டு**

நாங்கள் மிகவும் சுமுகமான சந்திப்பை மேற்கொண்டோம். இரு நாடுகளும் தற்போது சிறப்பான உறவுகளை வைத்திருக்கின்றன. இந்தியாவின் தார்மீக ஆதரவு எங்களுக்கு எப்போதுமே இருக்கிறது என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக நாங்கள் எதுவுமே பேசவில்லை. இரு நாடு களின் கடற்படைகளும் ஒருங்கிணைந்த ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. அதனால் அதைப்பற்றி பேசவேண்டிய அவசியம் இருக்கவில்லை என்று ஜனாதிபதி சொன்னார். (அ-த)

## யாழ்.குடாக்கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய கடற்சண்டையை அடுத்து கடலில் தொழில் செய்துகொண்டிருந்த மீனவர்கள் பதறியடித்துக்கொண்டு தமது வலைகள் மற்றும் தொழில் உபகரணங் களையும் கடலில் கைவிட்டுவிட்டு அவசர அவசரமாக கரைக்கு வந்து சேர்ந்தனர். கடலில் மோதல் சத்தத்தை கேட்ட கரை யோரப்பகுதி மக்கள், தொழிலுக்கு சென்ற தமது உறவினர்களைத் தேடி கடற்கரைக்கு ஓடினர்.

பெண்கள் தொழிலுக்கு சென்ற தமது கணவர், பிள்ளைகளின் அடையாள அட்டை, குடும்பப் பதிவு அட்டைகளையும் எடுத்துக்கொண்டு கடற்கரைக்கு விரைந்தனர். எனினும் மீனவர்கள் எவரும் பாதிப்பு இன்றி கரை திரும்பினர்.

சம்பவ நேரத்தில் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கரை திரும்பியதும் கடற்படையினரால் விசாரிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடலில் சம்பவம் நடைபெற்றபோது தொழிலில் ஈடுபட்டிருந்த நாற்பது பேர், நேற்று இரவு சுமார் 7.30 மணியளவில் படையலுவலகத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர் என்றும் கடல் பாஸ் பெறப்பட்டதாகவும் அறியவந்தது. அவற்றை இன்று அடைக்கல மாதா கோவிலடி படை முகாமில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை -

கொழும்புத்துறை, மணியந்தோட்டம், அரியாலை கிழக்குப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இதன் காரணமாக பாஷையூர், குருநகர் பகுதிகளை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலைமை காணப்பட்டது.

(அ-த-51-68)


தரம் 4 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் - 2008
பயிற்சிப் பரீட்சை - 2
இன்று காலை
8.30, 10.30, 2.30
★வெளி மாணவர்களும் தோற்றலாம்.
வினாத்தாள் கிடைக்குமிடம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை
நாவலர், ஆனைப்பந்தி
**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்நகர்


## கடற்படைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று கடற்படையினரதும் சடலங்களும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக இன்று படைத்தரப்பிடம் கையளிக்கப்படும் எனவும் புலிகள் தெரிவித்தனர். (அ-த-51)


**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ரோகிணி முதலாம் பாதம், இடபராசி, 32 வயதுடைய அரசாங்க வேலை புரியும் அழகான மணமகனுக்கு 27-30 வயதுடைய ஆசிரியராகவோ அல்லது அரச பணிபுரிப வராகவோ இருப்பது விரும்பத்தக்கது. அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

"அபிலாஸ்"
வளாக வீதி கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். 021 222 5743 (66902)



**IIS Computer Courses**

அனேக மாணவரின் எதிர்பார்ப்புக்கு அமைய

அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான 5ஆவது புதிய பிரிவு ஆரம்பம்.

14/10/2007 பகல் 10.00 மணி

இயக்குநர், IIS,
இல.100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்


## வெலிக்கடை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைக்கு ஐ.நா.சபையும், மனித உரிமைகள் ஆணையமும் உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இதனைச் செவிமடுத்த அம்மையார், எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் அரசியல் கைதிகள் அனைவரினதும் வழக்குகளை விசாரித்து தீர்வு காணுமாறு இலங்கை அரசிடம் தாம் வலியுறுத்துவார் என்றும்.

அதற்கு பின்னரும் உரிய தீர்வுவழங்கப்படாவிட்டால் ஐ.நா.சபை இவ்விடயத்தில் மீண்டும் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியளித்தார். அம்மையாரின் உறுதிமொழியை ஏற்றுக்கொண்ட கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டனர். (அ-த)


புதிய பிரிவுகள் ஆரம்பம்!!
**CB Computer Academy**
Station Road, Kondavil. 021-4590291
15.10.07 (Mon)
Diploma in DTP & Graphics Design
Diploma in Programming Languages
Diploma in Web Designing
முதல் நாளே இணையுங்கள்!!!


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி கனகசபாபதி



நவாலியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகசபாபதி நேற்று (13.10.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பார்வதிப்பிள்ளையின் மகனும், இராஜநாயகம் - இரத்தினத்தின் மருமகனும் செல்லத்தின் அன்புக் கணவரும், ரவீந்திரன், செல்வநிதி, சுபத்திரா ஆகியோரின் தந்தையும் இந்திராணி, முருகதாசன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் சகோதரனும், கிருஸ்ணவேணி, சண்முகநாதன் ஆகியோரின் பெரியதந்தையும் நாகேஸ்வரன், நீரஜா ஆகியோரின் மாமனாரும் யாசினி, திஷா, தினேஷ், திவ்வியா, கதிரோன், தர்சனா, கீர்த்தனா, கர்ஷன், ஷாருஜன், அபிசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.10.2007) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி,*
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.* (66933)

தகவல்:
குடும்பத்தினர்.

### விஸ்வநாதன் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் கணபதிப்பிள்ளை நேற்று (13.10.2007) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இராமலிங்கம், கனகம்மா, கமாலாசனி மற்றும் செல்லம்மா, வள்ளியம்மை (ஆசிரியை) ஆகியோரின் சகோதரனும்,சௌந்தரராஜன், காலஞ்சென்ற சின்னராசா, சேனாதிராசா, பத்மராணி, செல்வராணி ஆகியோரின் தந்தையும், யோகேஸ்வரி பத்மாசனி, சிவாசினி, சண்முகநாதன், செல்வரட்ணம், ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*3 ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (66932)

தகவல்:
திருமதி செல்லம்மா சுப்பிரமணியம்
(சகோதரி)

### சின்னத்தம்பி சிவலிங்கம்(மகான்)



தோலகட்டி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், தட்டாதெரு, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவலிங்கம் நேற்று (13.10.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் லட்சுமி தம்பதியியரின் பாசமிகு புதல்வரும், நடேசு மற்றும் காலஞ்சென்ற யோகம்மா தம்பதியரின் மருமகனும், சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும், உதயசாரனின்(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி - 9ஆம் ஆண்டு) பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், அமுதலிங்கம் மற்றும் மகேஸ்வரி, புவனேஸ்வரி, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று(14.10.2007) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*550/1, கே.கே.எஸ். வீதி,*
*தட்டா தெரு,*
*யாழ்ப்பாணம்.* (66924)

தகவல்
மனைவி

### சுப்பிரமணியம் இராஜசேகரம்

சுழிபுரம் பெரிய பரிகாரியாரின் பாட்டனும், சுப்பிரமணியம் (பெரிய தம்பிபரிகாரியார்) அவர்களின் மகனும், தனலட்சுமியின் அன்புக் கணவருமான இராஜசேகரம் மலேசியாவில் (10.10.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும், காலஞ்சென்ற விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, Dr.கணேஸ்வரி ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற நாகலிங்கம் மகேஸ்வரியம்மாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சரவணமுத்து(கமலபாரதி), இராமநாதன்(துரை), வெற்றிமாதேவி - துரைராஜலிங்கம் (பிரான்ஸ்), நாகபுஸ்பம் - சிவச்சந்திரன், பரிபூரணம் - சிவகாந்தா, நாகேஸ்வரி - மார்க்கண்டேயர், ஆறுமுகசுவாமி - பத்மராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், செல்லத்துரை, மயில்வாகனம், தனிப்புலசிங்க முதலியார் உலகநாதன், மகாலிங்கம், திருமதி பாலகிருஷ்ணன், நகுலாம்பாள் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சுழிபுரம் கிழக்கு*
*சுழிபுரம்.* (66931)

தகவல்
இராமநாதன்
(மருமகன்-துரை)


**தொழிற்துறைத் திணைக்கள மாகாண கைத்தொழில் கண்காட்சி - 2007**
நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். - தொழில்துறைத் திணைக்களம்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org